
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4- 0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 2 | ஈரோடு, அக்ஷய ஞு பங்குனி-மீ 14-உ (27—3—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 48.



## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

# உண்மை விளக்கம்.

(சிவசர்புசாமி எழுதுவது)
(சென்றவாரத் தொடர்ச்சி)

"யாவர்க்கும் அடிசருக்கும்" மனிதன் தவறிப்போவதும் இயற்கை. ஆகலின் நம்மவரின் விசாரணைக் குறைவினாலும், வெறும் நம்பிக்கையினாலும் புகழ்ச்சி விருப்பத்தினாலும், பசப்பு மொழிகளைக்கேட்டு இறுமாந்து ஏமாந்து போயினர் எனினும் உண்மைக்கு ஒரு நாளும் அழிவில்லையென்னும் பழமொழிக்கிணங்கத் தற்காலம் உள்ளக்கிளர்ச்சி உண்டாகிமோசத்தை வேரோடு பறித்தெறிய எண்ணமுண்டாயிருக்கின்றதல்லவா? அவ்வெண்ணம் அருளாலே மேன்மேலோங்கி வளர்வதாக.

ஒருவன் தனது தங்கையோ, தாயோ, மகளோ, மற்றயாரேனும் வெற்றூர் சென்று வெகுநாள் வரையில் வீட்டுக்குத் திரும்பி வாரதிருக்கும் காலத்தும், இன்ன இடத்தில் இன்னபடி இருக்கின்றனரென்பதும் தெரியாதிருந்தால் காணமல் போன ஒருவருக்கோ பலர்க்கோ உண்டி உடை முதலியவைகளை மந்திர சக்தியினாலோ, தந்திர யுக்தியினாலோ சேர்ப்பிக்க முடியுமா? முடியவே முடியாது. அங்ஙனமாக இறந்தவராகக் குறிக்கும் ஏராளமான செலவின்பேரில் பலவகைப்பண்டம் வஸ்திரம் முதலியவைகளை அறவைப்பார்போல் நின்று கொள்ளையடிக்கக் கருதுகளென்று சொல்லிக்கொள்ளும் புரோகிதரோ, பண்டாரமோ, தேசிகரோ, இறந்தவரிருக்குமிடத்திற்குக் கொள்ளவேனும் அனுப்ப முடியுமா? அல்லது நேரில்கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வரவாவது முடியுமா? வந்தது போதும் முந்தானையிலே போடு என்று வாய்க்கரிசி வாங்கிக்கொண்டு போவோரும் பல்லைக்காட்டிக் கெஞ்சி வாங்கிக்கொண்டு போவோரும் மிரட்டித் தட்டிப்பறிக்கும் தாசர்களுமா நன்மை செய்து விடுவார்கள்? 'வஞ்சகத்தை அறியாமல் நம்மவரெவரும் காணாதவைகளை நம்பிக் கொட்டியளந்து கெட்ட பெயரைக்கட்டிக்கொண்டார்கள் போதும் போதும் புண்ணியங்கெடுவது. இனிக் கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளலாமா? இனிமேலாவது எல்லோரும் ஏகோபித்து சகோதர உரிமையோடு சாதி மத வேற்றுமைகளைத் தள்ளிவிட்டுச் சமரச உணர்ச்சியோடு உள்ளும் புறமும் ஒக்க நடத்தலே தக்க பண்புடைய மக்களுக்கு முக்கியமாக இருக்கவேண்டிய குணங்கள் எட்டு:— 1 கொல்லாமை, 2 அடக்கம், 3 தவம் 4 வாய்மை 5 பொறை 6 அறிவு 7 அன்பு 8 அருள் என்பன. இவ்வெட்டுக் குணங்களும் ஒருவனிடத்தில் இருக்குமாயின் அவனே மகான், துறவி, ஜீவன்முக்தன் என்னும் பெரியோர் கூறுவர். கடவுளை வழிபடும் முறையிலே புற வழிபாட்டுக்கு எட்டுவகைப் பூக்கள் ஏற்றமுடையன வென்று சித்தாந்த நூல்கள் சிறப்புற உரைக்கின்றன. அகவழிபாட்டுக்குக் கூறப்போந்த கொல்லாமை முதலிய எண்வகைப் பூக்களும் ஏற்றமுடையன வென்று இயம்புகின்றன. எவ்வாற்றானும் அகமும் புறமும் உலகத்திலே எல்லார்க்கும் தேவையாயிருந்தாலும் அகமே மிகச்சிறப்புடையதாகும். புறப்பூசை சாதனமாகும் அகப்பூசை சாத்தியம் (சித்திக்கதது) ஆகும். ஆதலின் "அலல் ஆக்கைக்கில்லை; அருவருப்பும் இல்லை, கொலையுமில்லை, உட்பூசை கூடு."

கூறிப்போந்த எட்டினுள் கொல்லாமையாவது அஹிம்சா தர்மமே; அடக்கமாவது பொறிகளின் வழியாய்ப் புலன்களைச் செலுத்தாது மன ஒருமைப்பட்டு நிற்றலே; தவமாவது தனக்குவரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளுதலும், பிறவுயிர்களுக்கு எக்காலத்தும் எக்காரணத்தைமுன்னிட்டும் துன்பமுண்டாக்காதிருத்தலுமே. "உற்ற நோய் நோன்றல், உயிர்க்குறுக்கண் செய்யாமை அற்றே தவத்திற் குரு." "சினத்தைப் பேணில் தவத்திற் கழகு." வாய்மையெனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல்." பொறையாவது தன்னிற்றாழ்ந்தோர் தன்னை யேதேனும் கேடு விளைப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது மேலும் தாழ்ந்தவர்க்குத் தீங்கு சிறிதளவேனும் உண்டாகவேண்டுமென்று எண்ணுதலும் இருத்தலே.

அறிவு:—"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு." "எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு அவ்வதுறைவது அறிவு" 'நல அறிவு எல்லாச்சிறப்பும் தரும்'

அன்பு:—"அன்பிலாரெல்லாந் தமக்குரியர், அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு." "அன்போடியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு." "அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு."

அருள்:—"அல்லல் அருள் ஆள்வார்க்கில்லை வளி வழங்கும் மல்லல் மாஞாலங்கரி" "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்." இவ்வெட்டுவிதமான பூக்களைக் கொண்டு எந்நாளும் இறைவனையிலே அருச்சிப்போர்க்கு எவ்வாற்றானும் துன்பம் வந்தணுகாது, இன்பமே எய்தும், எய்தப் இகத்துக்கும் பரத்துக்கும் ஏற்றமுறை இதுவே. இவ்வெட்டுக் குணங்களும் காந்தியடிகளிடத்தில் காணலாம். ஒவ்வொன்றையும் ஊன்றிப்பார்க்குங்கால் அவற்றின் சாரம் அந்த மகாத்மாவின் இதயத்திலே கலந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. கடவுள் இல்லையென்று சொல்லுபவரானாலும் அவர்மாட்டு இந்த அரும்பெருங் குணங்கள் அமைந்திருக்குமாயின் அவர்களும் நன்கு மதிக்கத்தக்கவர்களே, நாட்டுக்கு நலம் புரிபவர்களே, சாதிக்கும் சமயத்துக்கும் சாதகஞ் செய்பவர்களே யாவர். இந்தக் குணங்களை வருந்தியாயினும் தம்மிற் பொருந்தப்பெறுதல் கொண்டு எந்தக் காரியத்தில் தலையிட்டாலும் பலன் எளிதிலே கைகூடுமென்பது திண்ணம், திண்ணம். "கற்றும் என்பலன்? கற்றிடுதான் முறை சொற்ற சொற்களைச் சுகாரியமோ! நெறி நிற்றல் வேண்டுமே." கும்பலிலே கோவிந்தா போட்ட கதையாய் முடியாமல் தன் மதிப்பைப் பெறுமாறு தாழ்விலலாத முயற்சியில் ஈடுபட்டு தாய்நாட்டிற்கும் தாய்மொழிக்கும் பெருமை உண்டாக்கி வாழும் நல்வாழ்வை நாடோறும் கைக்கொள்ளல் வேண்டும். நமது இந்தியாவிற்கிய துறவி திருமிகு ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்கா முதலிய அன்னிய கண்டங்கள் அனைத்தும் சுற்றி அரும்பெரும் உண்மையை வேற்றுமதத்தினர்க்கு விளக்கப்படுத்தினர். அக்காலத்தில் எத்தனையோ இடையூறுகளும், தடைகளும் வந்திருந்தபோதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது குறிப்பிட்ட வெற்றியை மேவினர். அது உலகமறிந்த உண்மையே. அதுபோல நம்மவர் நட்பலர் நன்மையை நாடி பட்டணங்கள் தோறும், ஊர்கள் தோறும், வீடுகள் தோறும் சென்று நன்மதிப்பைச் சாரும் வழியைத் தாராளமாக எடுத்துச்சொல்லிப் பிடித்த வினையைப் பிடுறச் செய்தல் வேண்டும். தம வலிமையும், மாற்றார் வலிமையும் நான்றாய் நோக்கி வெற்றிபெறும் முறையிலே செல்லல்வேண்டும். மனத்திட்பம் மட்டும் மாறுதிருக்கவேண்டும். கூறிப்போந்த வண்ணம் மாசில்லாத மனத்திலே அறங்கள் அனைத்தும் அகலாமல் நிற்கும் நிற்கவே அறிவும், ஆற்றலும், உடன்போந்திருக்கும் திட்பமும் உள்ளத்தில் தெளிவைத் தவிர வேறொன்றும் மேவாது. ஆதலின் தன்மானம் பேணித் தகைசான்ற வினைகளைச் செய்வதே சிறப்பைத் தரும் தற்காலமோ நம்மவர்கள் வெற்றிக் குறிகளை விளக்கிக்கொண்டிருந்தாலும் குற்றம்பிழைக்கும் கொள்கை உடையார் சமயம் பார்த்துக்கொண்டு தீவிரமாகச் சூழ்ச்சி வலைகளை வீசிக்கொண்டிருக்கின்றனர். அதற்கேற்ற உபாயங்களை அனுசரித்து அபவாதத்துக்கும், ஆபத்துக்கும் இடமில்லாமல் குறிப்பிட்ட இலக்கைப் பற்றிக்கொள்ளல்வேண்டும். அவரவர் குடும்ப அலுவல்கள் அநேகமிருந்தாலும் அவற்றுடன் இதையும் அனுசரித்து வர வேண்டும். இதுதான் கடவுள் வழிபாடுமாகும்.

எத்தகைய பக்தி சக்தியுடையவராயினும் தத்தம் கடமையினின்றும் பிசகி நடப்பாராகின் அவர்கள் நிச்சயம் தோல்வியுறுவர். குறிப்புக் கவறுதலற்று முறையிலே பார்க்கின்றச் செயலை எதையும் எளிதில் முடித்துவிடுவர். வெளித்தோற்றமட்டிலே தமக்குக் கடவுளின் அருள் இருக்கின்றது எண்ணினபடியே எல்லாவற்றையும் பெறுவோமென்றும் இறுமாப்போடு கூடிய மாந்தருமுளர். அவர்களுக்குத் தெரியின் பிறழ்ச்சி கெடுமாயின் காரியக்கேடுதான். உலகத்திலே தான் என்னும் கோணலைநிமிர்த்தவரே நிலையான பயனைப்பெறும் நேர்மையுடையவர் என்பது உண்மைக்கல்வியறிவுடையார் துணிபு. எம்மதத்தினராயினும் நான் என்று என்று எண்ணிக்கொண்டோ, பேசிக்கொண்டோ இருப்பது பிறழ்ப்படும் நோக்கமே என்று அநந்த மகாசாரியரும் அறிஞரும் எற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். ஆதலின் எவ்வாற்றானும் ஒவ்வொருவரும் கடவுளின்

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.)

# ஆகாரம்.

(கைவல்யசாமியார் எழுதுவது)

ஆகாரமானது இடம், பிறப்பு, தொழில், வழக்கம், காலம் ஆகிய வேறுபாட்டுக்கு ஏற்றவாறு வெவ்வேறாயிருக்கிறது. ஆகார விஷயத்தில் நேர் எதிரிடையான அபிப்பிராயங்களையுடைய விவாதங்கள் அநேகம் நடந்து வருகின்றன. அதைப்பற்றி அபிப்பிராய வித்தியாசங்கள் முன்னுமிருந்தன; இன்னும் அநேகமிருக்கின்றன. நாமும் அதைச்சிறிது ஆராய்ந்து சாஸ்திரத்தினுடையவும் அனுபோகத்தினுடையவும் போக்கைத்தெரிந்து கொள்ளுவோம்.

"ஆகாரமானது பரிசுத்தமாயிருந்தால் மனமானது பரிசுத்தமாகிறது; மனமானது பரிசுத்தமானால், ஆத்மபரிபூரணதத்வத்தின் ஞாபகம் உறுதியடைகிறது" என்பதின் உண்மையை இந்துமதத்திலுள்ள நமது வெவ்வேறு வகுப்புகள் அனைத்தும் ஒப்புக்கொள்ளுகின்றன. ஆகாரத்தின் தன்மைக்குத்தகுந்தவாறு இந்திரியங்கள் வேலை செய்கின்றன. அசுத்த ஆகாரமானது இந்திரியங்களின் சுபாவிக சக்தியை பலஹீனப்படுத்துகிறது அல்லது அழித்துவிடுகிறது. அஜீரணமானது விஷயங்களின் திருஷ்டியைக்கலக்கி ஒன்றை வேறொன்றாகத் தோன்றும்படி செய்கிறதென்பதும், ஆகாரக்குறைவானது தேகத்தைப்பலஹீனப்படுத்தி கண்பார்வையையும் மங்கச் செய்துவிடுகிறதென்பதும் எல்லோரும் நன்கு அறிந்த விஷயமாம். அதுபோன்றே ஒருவித விசேஷ ஆகாரமானது சரீரம் மனம் முதலியவற்றிற்கு ஒரு விசேஷமான ஸ்திதியை யுண்டுபண்ணுகிறது என்பதும் அடிக்கடிகாணப்படுகிறது. அநேக விஷயங்களில் நாம் புத்திமதியினுள் அடங்கியுள்ள அறிவை மறந்து விட்டு, உமிழைப்பொருக்குவதிலேயே சதாசுறுப்பாயிருந்த பொழுதிலும், இந்தவிதமான ஆகாரம் கொள்ளவேண்டும்; அந்தவிதமான ஆகாரம் தள்ளவேண்டும் என்ற தத்துவமானது நமது இந்து ஜனசமூகத்திற்கு விதித்த அநேக விதிகளின் வேரில் பதிந்திருக்கிறது.

ஆகாரத்திற்கு மூன்றுவித தோஷங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன ஜாதிதோஷம் ஆச்ரயதோஷம் நிமித்ததோஷம் என்பனவாம். இம்மூன்றுவித குறைகளும் ஆகாரத்தை அசுத்தமாக்கி விடுகிறபடியால் அவற்றை அறிந்து தள்ளிவிடவேண்டுமென்று நம்பெரியவர்கள் சொல்லுகிறார்கள். முதலாவது ஜாதிதோஷம்; அதாவது, ஆகாரப்பொருள்களின் தன்மை. வெங்காயம்; வெள்ளைப்பூண்டு; முதலியவைபோன்றன இவற்றுக்குக்கொதிப்பையுண்டு பண்ணும்படியான தன்மையுண்டு; உட்கொள்ளப்பட்டால், மனத்தின் அமைதியைக்கெடுத்து விடுகின்றன. அடுத்தது ஆச்ரயம்; அதாவது யாரிடமிருந்து ஆகாரம் வருகிறதோ அவருடைய தன்மை; கெட்டகுணமுடையவரிடமிருந்து கிடைக்கும் ஆகாரமானது மனிதனை அசுத்தமாக்கித் துஷ்ட நினைப்புகள் நினைக்கச்செய்யும்; ஆனால், சத்புருஷனிடமிருந்து கிடைக்கும் ஆகாரமானது மனிதனுடைய நினைப்புகளை மேம்படுத்திவிடும்; மூன்றாவது நிமித்த தோஷம் என்பது ஆகாரத்தில் அழுக்கும் தூசியும் ரோமத்துண்டுகளும் விழுவதினால் உண்டாகும் கெடுதியாம். அத்தகைய ஆகாரத்தை உட்கொண்டால் அது மனத்தை அசுத்தமாக்கி விடுகிறது. மூன்று குறைகளுள், ஜாதியையும் நிமித்தத்தையும் நீக்குவதற்கு மனிதனால் முயற்சிக்கமுடியும்; ஆனால் ஆச்ரயத்தை நீக்குவது எல்லோருக்கும் எளிதன்று. இந்த ஆச்ரயத்தை நீக்குவதற்காக நாம் நமக்குள்ளே "தொடாதே" என்ற கொள்கையை அவ்வளவு அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். எப்பொழுதும் சுத்த சங்கல்பமுடையவனும் வஞ்சனையில்லாத சாந்தமும் சத்துவகுணசம்பத்தும் கருணைசொரூபமும் பரோபகார கர்மங்களும் நிறைந்தவைகளுக்கு பிராமணத்தன்மை என்று பெயர் இக்குணங்கள் பிராமணனென்று சொல்லப்பட்ட எல்லா மனிதனிடமும் இருக்குமென்கிற எண்ணத்தினால், பிராமணனிடம் ஆகாரம் உண்பதற்கும் அவர்கள் தொடுவதற்கும் தோஷமில்லை என்னும் வழக்கம் வந்திருக்கிறது. ஆனால் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் வண்டியானது குதிரைக்கு முன்னே வைக்கப்பட்டு விடுகிறது; கொள்கையின் உண்மைப்பொருள் தப்பிதமாகக்கருதப்பட்டு அது ஒரு விநோதமானமூடக்கொள்கையாய் விடுகிறது. நாம் பார்ப்பானிடம் உண்பது விசேஷமென்று நினைக்கிறோமே ஒழிய நிமித்தக்குறைவைப்பற்றி கவனிப்பதில்லை. அழுக்கும் தூசியும் கலந்த ஆகாரத்தை யுண்பது சகஜமாய்விட்டது. அழுக்குகள் படியும்படி அலட்சியமாய் செய்யப்பட்டு ஆகாயத்தில் அழுக்குகளும்படும்படி திறந்து வைக்கப்பட்ட நமது கடைகளிலிருந்து ஆகாரம் வாங்கி உண்பது அசுத்தமே. பட்டணத்து ஜனங்கள் பசியிலா வியாதியினாலும், க்ஷயம், அஜீரண பேதி முதலிய வியாதியினாலும் இக்காலத்தில் துன்புறுவதற்குக்காரணம் கடைகளிலிருந்து வாங்கி உண்ணும் ஆகாரமே. கிராமத்து ஜனங்கள் சாதாரணமாக இந்த வியாதியினால் பீடிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் மத்தியில் இக்கடைகளில்லாமலிருப்பதேயாம். கிராமவாசிகள் பட்டணக்கரைகளில் வந்து பழகிவிட்டபடியால் கிராமங்களிலும் அவர்களுக்கு ஆபத்தை உண்டாக்கு இக்கடைகள் அங்கும் பரவுகின்றன.

## மாம்ச ஆகாரம்.

பூர்வகாலத்திற் போலவே இக்காலத்திலும் மாம்சபட்சணம் செய்வது நல்லதா? தீயதா? அல்லது சாகபட்சணம் செய்தே வாழவேண்டுமா? மாம்சம் உண்பதினால் நன்மையா? அல்லது கெடுதலா? என்பதைப்பற்றி பெருந்தர்க்கம் நடந்துவருகிறது. தவிர மிருகங்களைக்கொல்வது சரியா? தப்பா? ஜீவகாருண்யம் வேண்டாமா? அநேககுடும்பங்களைக் கெடுத்து நாசம் செய்து தான் வாழ்வதைவிட ஒரு பிராணியின் உயிரைக்கொல்லுவதில் ஜீவகாருண்யம் போயாவிடும்? "உயிரைக்கொல்லுவது பாவம்" என்றும் "எக்காரணத்தைமுன்னிட்டும் பிராணி ஜீவ இம்சை கூடாது" என்றும் ஒரு கட்சியார் கூறுகின்றனர். மறு கட்சியார் "அது எப்படி முடியும்? சரீரத்தையில்லாமல் வாழ்தல் அசாத்தியமாம்" என்று கூறுகிறார்கள் சாஸ்திரங்களும் வித்தியாசப்படுகின்றன. "யாகத்தில் தவிர மற்ற சந்தர்ப்பங்களில மிருகங்களைக்கொல்லுதல் பாவம்" என்று இந்துக்கள் கூறுகிறார்கள்; மனிதன் யாகத்திலே கொன்ற பின் மாம்சம் தின்னும் சுகத்தைக் கேட்பாரின்றி யனுபவிக்கமுடியும் கிரகஸ்தன் சிரார்த்தம் போன்ற சில சந்தர்ப்பங்களிலே மிருகங்களை கொல்லத்தவறுவானாயின்; அவன் 'பாவி' என்று இழித்துரைக்கப்படுகிறான் "சிரார்த்தத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் அங்கு அளிக்கப்படும் மிருக ஆகாரத்தை யுண்ணாவிடில் அவர்கள் தங்களுடைய மறு ஜென்மத்தில்மிருகங்களாகிறார்கள்" என்று மனு கூறுகிறார். மனு ஸ்மிருதியில் பிர்மா மனிதனுக்காகவே மச்சத்தைச் சிருஷ்டித்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. மறு கட்சியிலே சமணர்களும் பௌத்தர்களும் வைஷ்ணவர்களும் சைவர்களும் இத்தகைய இந்து சாஸ்திரங்களுக்குச் செவி சாய்க்காமல் எக்காரணத்தைமுன்னிட்டும் அவர்கள் ஜீவ இம்சையை ஒப்புவதில்லை. வைஷ்ணவர்களுடைய கடவுளாகிய இராமரும் கிருஷ்ணரும் மாம்சமுண்டார்களென்பதற்கு இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. சைவத்திலோ சில முக்கியமான கோவில்களில் அம்மனுக்கு எருமைக்கிடா வெட்டுகிறார்கள். கோழியும் மச்சமும் சுப்பிரமணியருக்குத் திருப்தியான சாதனம். ஒரு கொடியின் கழுத்தைக் கிள்ளுவது பாவம் என்று சொன்ன ரிஷிகளே மனிதனுடைய தேகத்தைக் காப்பதற்கு புலி, கழுதை காக்கை முதல் எல்லாபிராணிகளின் மாம்சத்தின் குணங்களை வைத்தியத்தில் சொல்லியிருக்கிறார்கள். பௌத்தச் சக்கிரவர்த்தியாகிய அசோகன் யாகங்கள் செய்து மாம்சம் உண்டவர்களையும் வேறு வேறு சடங்குகளிலே அழைக்கப்பட்டு மாம்சம் கொடுத்தவர்களையும், உண்டவர்களையும் தண்டித்தான் என்பது இந்து தேச சரித்திரம் படித்தவர்களுக்குத் தெரிந்ததே அசோகச் சக்கரவர்த்தி காலத்திற்குப் பிறகுதான் நம் நாட்டில் மாம்சம் தின்னும் வழக்கம் குறைந்தது. அதற்குப் பின்னே அன்னியர் படையெடுப்பும அட்டூழியங்களும் அதிகமாயிற்று.

## மேனாட்டில் மாம்ச ஆகாரம்.

நாம் நமமுடைய சாஸ்திரங்களைப் பின்பற்றவு மாட்டோம். பெரிய ஆசாரியர்கள் கூறுவதை கேட்கவுமாட்டோம். கேள்வி, உத்தரம் இரண்டையும் கவனித்து அடைந்துள்ள நிச்சயத்தையும ஒன்றுபடுத்தி ஆலோசனை சக்தியினால் தெளிந்து கூறுகிறவர்களைப் பின்பற்றும் குணத்தில் மேனாட்டார் நம்மைவிட உயர்ந்தவர். லௌகீகத்திற்கு எது பொருத்தமோ அதில் அவர்கள் புத்தி செல்லுகையில் மூட வழக்கங்கள் அவர்களைத் தொடர்வதில்லை ஆனதால் மேனாட்டில் இதைப்பற்றின விவகாரம் வேறாயிருக்கிறது, அங்கு மாம்ச பட்சணம் சரீர சுகத்திற்குக் கெடுதலை உண்டாக்குகிறதா அல்லவா? மரக்கறியை விட அதிக பலம் அளிக்கக்கூடியதா அல்லவா? என்பனவற்றைப்பற்றிய வாதம் நடந்துகொண்டிருக்கிறது. "மாம்ச பட்சணம் செய்கிறவர்கள் எல்லாவித வியாதிகளினாலும் துன்புறுகிறார்கள்" என்று ஒரு கட்சியார் கூறுகின்றனர். மறு கட்சியார் "அது எப்படியிருக்கக் முடியும்? அப்படியாயின் இந்துக்கள் மிகமிக ஆரோக்கியம் வாய்ந்த ஜாதியாராயிருந்திருப்பார்களே. ஆங்கிலேயர்களையும் அமெரிக்கர்களையும் மற்றவர்களையும் போன்ற மாம்சத்தையே முக்கிய ஆகாரமாயுடைய சக்தி வாய்ந்த ஜன சமூகங்கள் இதற்குள் அழிந்துபோயிருக்கவேண்டுமே" என்று கேட்கின்றனர். "ஆட்டினுடைய மாம்சம் மூளையை ஆட்டினுடையது போன்று ஆக்கிவிடுகிறது" என்றும; "பன்றியின் மாம்சம் பன்றியினுடையது போன்று ஆக்கிவிடுகிறது" என்றும்; "மீன் மீனினுடையதுபோன்று ஆக்கிவிடுகிற"தென்றும் ஒரு கட்சியார் கூறுகின்றனர். அப்படியாயின் "உருளைக்கிழங்கு, உருளைக்கிழங்கு போன்ற மூளையை உண்டாக்கிவிடுகிறது" என்று வாதிக்கப்படமுடியுமே, மரக்கறியினுடைய சத்து என்றுமே சோராத மூளையை உடைத்தாயிருப்பதைப் பார்க்கிலும மிருகத்தினுடைய அறிவோடு கூடிய மூளையை உடைத்தாயிருப்பது மேலல்லவா!" என்று மறு கட்சியார் கூறுகின்றனர். "மாம்சத்தில் ரசாயனமாய் எது உள்ளதோ அது மரக்கறி ஆகாரத்திலும் உள்ளது" என்று ஒரு கட்சியார் சொல்லுகின்றனர். மறு கட்சியார், "ஏன்? அது ஆகாயத்திலும் கூட உள்ளது அப்படியாயின் காற்றையே உண்டு ஜீவியுங்கள்" என்று கூறுகின்றனர். மரக்கறி உண்பவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் என்றும் கடினமான வேலை செய்ய முடியும் என்றும் ஒரு கட்சியார் வாதிக்கின்றனர். அப்படியாயின் மரக்கறியுண்ணும் ஜன சமூகங்கள் மிகமிக முன்னேற்றமடைந்தவர்களாக இருக்கவேண்டுமே; அப்படியில்லையே. மிகமிக பலமும் மிகமிக முன்னேற்

14ம் பக்கம் பார்க்க

## ஏன்
## பிராமணர்கள் மட்டும் ஒன்று மற்றையோர் எல்லாம் ஒன்று?

நமது நாட்டிலும், முக்கியமாய்த் தென்னாட்டிலும் பிராமணரல்லாதாரியக்கம் தோன்றியகால முதலே நூற்றுக்கு மூன்று பேர் பிராமணர்களென்றும் ஏனையோர் தொண்ணூற்றேழு பேர்களென்றும் ஆதலால் உத்தியோகங்களும் பதவிகளும் மேற்கண்ட விகிதாசாரம் கிடைக்கவேண்டுமென்றும் கிளர்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது பலவேறு ஜாதி மதம் பிரிவுகளிருக்க பிராமணர்களை மட்டும் பிரித்து விட்டு மற்றையோர் கூடிக்கொண்டு, பிராமணரல்லாதாரென்று ஒரே வகுப்பாய் இருக்கிறார்களே என்று கேட்கலாம். ஏனெனில் பிராமணர்களும் நமது நாட்டில் பிறந்தவர்கள் சகோதரர்கள், அப்படியிருக்க அவர்களை மட்டும் தனியாய்ப் பிரிப்பானேன் என்று கேட்பது நியாயந்தான் இதை ஆதாரமாகக் கொண்டு தான் ராஜீய விஷயத்தில் வகுப்புவாதம் கூடாதென்று சொல்லுகிறார்கள். இந்தக் காரணமும் விடையிறுக்க வேண்டுவதுதான்.

### ஐக்கியம்.

ஒன்றுக்கொன்று சகோதரத்துவ ஐக்கியம் வேண்டுமானால் ஆண்களாயிருந்தாலும் பெண்களாயிருந்தாலும் மேல் கீழ் முறை வித்யாசம் கூடாது. இரண்டாவது உறவு கொண்டாடவேண்டும். அதற்கு ஆதாரமாக சுகதுக்கம், பெருமை, சிறுமை இவைகளை பொதுவாக நினைக்கவேண்டும். ஒருவர் மனமும் புண்படும்படியாக மற்றவர் நடக்கக் கூடாது. மற்றவர்களைத் திருப்திப்படுத்தவே ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

### பாகுபாடு செய்தது யார்?

நாம் பிராமணனைப் பிரித்தோமென்று சொல்வது சரியல்ல; பிரித்தவர்கள் பிராமணர்களே. நாம் பிரிவினையை வெறுக்கிறோம். பிராமணர்களுடன் கூட்டுறவு கொள்ளவேண்டுமென்பது தான் நமது விருப்பம். ஆனால் பிராமணர்கள் நம்மை சேர்க்க விரும்பவில்லை. அப்படி ஒருவர் இருவர் விரும்பினாலும் அவர்களது கெடுகாலை வழக்கம் இடங்கொடுப்பதில்லை.

### பிரிவினைகள்.

ஒரு பொதுக் குளத்திற்குப்போவோம். அங்கே "இது பிராமணன் குளிக்குமிடம்" "இது பிராமணரல்லாதார் குளிக்குமிடம்." ஒரு ஓட்டலுக்குப் போகலாம். "இதுபிராமணர் சாப்பிடுமிடம்" "இது பிராமணரல்லாதார் அல்லது சூத்திரர் சாப்பிடுமிடம்" இங்கே பிராமணனுக்கு மட்டும் சாப்பாடு போடப்படும் என்று இருக்கிறது. பிராமணரல்லாதார் ஓட்டலில் பிள்ளை, நாயுடு, கவுண்டர், செட்டியார் என்கிற இடம் பிரித்திருக்கிறதா? கோவிலில் பிராமணர்கள் கையில் பிரசாதம் வாங்கலாம், சூத்திரர்கள் கையால் வாங்கக்கூடாது. தரையில் பிராமணர்கள் விழுந்து கும்பிடலாம் சூத்திரர்கள் நின்றுதான் கும்பிடவேண்டும். இன்றைக்கு பிராமணனுக்கு அமாவாசை, நாளைக்கு சூத்திரர்களுக்கு அமாவாசை. இப்படி பிராமணர்கள் ஒரு வகுப்பினரென்றும் மற்றெல்லாப் பிராமணரல்லாதாரும் ஒரே வகுப்பென்றும் பிரித்து வைத்தவர்கள் பிராமணர்களே தவிர நாமல்ல. அதுமட்டுமல்ல பிராமணரல்லாதாரையாகிலும், அவர்கள் பல பிரிவினரென்றாவது நினைத்திருக்கிறார்களா? இல்லை. எல்லா ஜாதியும் ஒரே சூத்திரவகுப்பென்று தீர்மானித்து விட்டார்கள். அப்படியவர்கள் செய்தது நமக்கு எதிர்பாராத நன்மையாயிருக்கிறது.

### நமக்குள் ஒற்றுமை.

நாம் எத்தனை ஜாதியாக இருந்தாலும், ஒருவரோடொருவர் தொட்டுக்கொள்ளுகிறோம் ஒருவர் வீட்டிற்குள் ஒருவர் போகிறோம். ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுகிறோம். ஒருவர் வீட்டில் ஒருவர் கல்யாணம் ஆனால் கலந்து சீர் செய்கிறோம், சொந்த வீடுபோல் ஊழியம் செய்கிறோம், ஒரு வீட்டில் ஒரு சாவு ஏற்பட்டால் எல்லாரும் ஒன்று சேர்ந்து அவரவர்கள் சொந்தம் போல் துக்கங்கொண்டாடி அடக்கம் செய்கிறோம் ஒரு ஜாதியாரை இன்னொரு ஜாதியார் அண்ணனென்றும், தம்பியென்றும், தமக்கையென்றும், தங்கையென்றும் அத்தையென்றும், மாமியென்றும் நேசிக்கிறோம். இதில் யாருக்காவது சங்கோசமோ ஈனமோ இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால்

### பிராமணர்களின் விஷயத்திலோ?

நாம் அவர்களை எந்த முறையாவது கொண்டாட உரிமையுண்டா? ஆண் மக்களை சாமி என்றும், பெண்பால்களை அம்மா அல்லது அம்மாமி யென்றும் சொல்வதைத் தவிர வேறு பாத்தியமில்லை. இந்த நிலையிலிருக்கும்போது பிராமணர்களுக்கு நம்மிடமும் நம்மவர்களுக்கு பிராமணர்களிடமும் நிறைந்த ஒற்றுமை எப்படி வரும்? தவிர அவர்கள் வீட்டில் ஒரு கல்யாணம் அல்லது துக்கம் ஏற்பட்டால் நாம் போய் என்ன உதவி செய்யமுடியும்? நாம் ஏதாவது செய்வதாயிருந்தாலும் அவர்கள் சம்மதிக்க முடியுமா? ஆனால் நாம் ஏதோ ஒரு தீண்டப்படாதவராக இருந்துவிட்டுவரலாம். ஆனால் நம்ம பிராமணரல்லாதார்கள் வீட்டில் ஏதாவது கல்யாணம் கார்த்திகை நடந்தால் மட்டும் தட்சணை அல்லது சாப்பாடு இவைகளை முன்னிட்டு பெருங் கூட்டமாக வந்து நிறைந்து விடுவார்களேயல்லாமல் சாவு ஏதாவது ஏற்படும் பட்சத்தில் அடுத்த வீட்டில் குடியிருக்கிற பிராமணராவது வீட்டுக் கதவைத் திறப்பது பார்த்ததுண்டா? இல்லவேயில்லை. பிராமணர்களுக்குள் யாராவது காலமாகி விட்டால் கூட, பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோக பிராமணர்களை வாடகைக்கு பிடிக்கிறதாகத் தெரிகிறது.


### ஒன்றாக நினைப்பதெப்படி?

ஆகையால், ஆரம்பமுதலே பிராமணர்கள் முகத்தில் பிறந்தவர்களென்றும், அவர்கள் வேதம் படிக்கவும், ஆண்டவனை பூஜிக்கவும், பிராமணரல்லாதார்களுக்கு எஜமானர்களென்றும் தலைமுறை தலைமுறையாகக் குருமார்களென்றும், பிராமணரல்லாதார்கள் சூத்திரர், பாதத்தில் பிறந்தவர்களென்றும், வேதம் படிக்கக் கூடாதென்றும், கடவுளை தானாக பூஜிக்கக்கூடாதென்றும், தலைமுறை தலைமுறையாய சிஷ்யர்கள் என்றும், பிராமணரல்லாதார்களின் பிதுர்க்களை மோட்ச லோகத்திற்கு பிராமணர்கள் தான் அனுப்புகிறார்களென்றும் பிராமணர்களே நமக்கு நடமாடுந்தெய்வமென்றும், இன்னும் எத்தனையோ விதத்தில் தங்களுடைய ஜீவனோபாயத்தையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்தவேண்டி, சில போலிப் புராணங்களை எழுதிவைத்துக்கொண்டு பிராமணரல்லாதார்களை மிரட்டவேண்டியவர்களை மிரட்டி வாதிக்கிறவர்களை தூஷித்து மிஞ்சினவர்களை நேசித்து பல நூற்றாண்டுகளாகவே அவர்கள் வேறு மற்றவர்கள் எல்லோரும் வேறு என்ற சித்தாந்தத்தை இன்றுவரை நிலைநாட்டியே வந்திருக்கிறார்கள். நாமும் பலவிதத்திலும் அவர்களைத் திருப்ப முயற்சி செய்தும் பயன்படாமல் போகவே எப்படியும் இனி ஒற்றுமைக்கு வழியில்லையென்று தெரிந்தே வகுப்புவாதத்திலிறங்கவேண்டியதாயிற்று. நமக்குள் பிள்ளை, முதலியார், நாயுடு, நாயக்கர், செட்டியார், கவுண்டர் இந்தப் பிரிவினைப்படி நமக்குக்கிடைத்த உத்தியோகங்களைப்பங்கு போடவேண்டுமென்று யாரும் இதுவரை சொல்லவில்லை. ஆனால் நமக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க இஷ்டமில்லாதவர்களும் அவர்களால் தூண்டப்பட்டவர்களும் தான் பிராமணரல்லாதார்கள் பல வேறு ஜாதியினரிருக்கின்றனர். யாருக்கு உத்தியோகம் கொடுக்கிறது? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் பிராமணரல்லாதார்களுக்குள் பூசலுண்டாகி விடும் அது சுயராஜ்யத்திற்கு தடையாயிருக்குமென்கிறார்கள்.

இது பொருத்தமற்ற வாதம். அதோடு ஏமாற்றும் மார்க்கம் என்று கூட சொல்லலாம். ஆகையால் நமக்கு வழி காட்டியென்று சொல்லக்கூடிய பிராமணர்களே அவர்கள் ஒரு தனி வகுப்பென்றும் மற்றெல்லோரும் வேறொரு தனி வகுப்பென்றும் பிரித்துவைத்திருப்பதால் அந்த ஆதாரத்தைக்கொண்டே பிராமணரல்லாதார் ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கேட்கிறது. இதுமிகவும் கிரமமேயாகும்.

இதை ஒப்புக்கொண்டு சகோதரராக நடந்து கொள்வதைத் தவிர இனிமேல் வேறு வழி இல்லை. அதை விட்டு; காங்கிரஸ், தேசம், சுயராஜ்யம் என்கிற பெயரால் ஏமாற்றிவிடுகிற காலம் மலையேறிவிட்டது. இனிமேல் சகோதரத்துவம், சமத்துவம் என்கிற பாட்டைப் பாடாவிட்டால் காரியம் நடவாது என்பதை பிராமண சகோதரர்கள் பேரிலிருக்கின்ற அன்பினாலும், அவர்களும் நமது தேச மக்கள் நமது சுகதுக்கம் அடையக் கூடியவர்கள் என்ற எண்ணத்தாலுமே இவ்வளவு தூரம் எழுத முன் வந்தேன்.

க. வா. வெங்கடாசலம் பிள்ளை.



நாகை பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தாரால் திருவாளர்கள் ஏ டி பன்னீர்செல்வம் அவர்களையும், ஈ.வெ. ராமசாமி நாயக்கரவர்களையும் வரவேற்று நடத்தப்பட்ட ஊர்வலத்தின் காட்சி. (Photo by G. V Naidu. Negapatam)

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் தேவாங்க குல முன்னேற்ற சபையின் முதலாண்டு நிறைவுவிழா:—

நிகழும் அட்சய வரு பங்குனி மீ 15ந் தேதி (28—3—27) திங்கட்கிழமை மேற்படி சபையின் முதலாண்டு நிறைவுவிழா ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் தலைமையின் கீழ் சபைக் கட்டிடத்தின் முன்னமைத்திருக்கும் கொட்டகையில் அடியிற்குறித்தபடி நடைபெறும்

கடவுள் வணக்கம் ஸ்ரீமான் சிவலிங்கய்யர், வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தல்—சபை பிரசிடெண்டு, அக்கிராசனர் முகவுரை, வருடாந்திர அறிக்கை வாசித்தல்—காரியதரிசி, "சங்கமும் அதன் பயன்களும்" ஸ்ரீமான் என். நாகலிங்கம் செட்டியாரவர்கள், "சம்பாஷணை" எம். கனகசபாபதி, எஸ். நாகூர்சாமி, வி. நடராஜன், கே. அங்குமணி, "நாட்டின் வறுமை" ஸ்ரீமான் சு. ஆ. முத்துநாடாரவர்கள் "நாடார்குலமித்திரன்" பத்திராதிபர், "தற்கால நிலைமை" என். கருப்பையா பிள்ளையவர்கள், "தேசீய கீதம்" மாணவர் வாழவந்தான், அக்கிராசனர்பேருரை, வந்தனோபசாரம், இந்நிகழ்ச்சிகளுக்கு அனைவரும் விஜயம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீமான்கள் என். மல்லையா [பிரசிடெண்டு] க. சி. வீ. கலியாணி செட்டியார் [காரியதரிசி] அறிவிக்கிறார்கள்.

## பூளைமேடு P. S. கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ் தர்மஸ்தாபனம்.

### வருடாந்த நிர்வாக சபையின் நடவடிக்கைகளும் தீர்மானங்களும்

1927 வரு மார்ச்சு மாதம் 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூளைமேடு சர்வஜன வித்தியாசாலையில் ஸ்ரீமான் A. T. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சபை கூடிற்று.

கீழ்கண்ட டிரஸ்டிகள் ஆஜரானார்கள் ஸ்ரீமான்கள் 1 கோ. வெங்கிடசாமி நாயுடு 2. S. மீனைய செட்டியார் 3 P. S. வேணுகோபாலசாமி நாயுடு 4. B. நஞ்சுண்ட கவுடர் 5 V. ரங்கசாமி நாயுடு 6. T. S. சிவசுப்பிரமணிய செட்டியார் 7. வி. பேரநாயுடு 8. சி. கோவிந்தசாமி நாயுடு 9. P. S. G. கெங்கா நாயுடு 10 கோ. குப்புசாமி நாயுடு 11. சொ. முத்துசாமி நாயுடு 12 A. T. லட்சுமணசாமி முதலியார். முறைப்படி 1926 வரு ஜனவரி மாதம் 25 தேதி முதல் 1927-வரு ஜனவரி மாதம் 24 தேதி முடிய ஒரு வருடத்திய வரவு செலவு பேலன்ஸ் ஷீட்டு கணக்கு ஆனரரி செக்ரடரி அவர்களால் வாசிக்கக் கேட்டு சபையோர்களால் அங்கீகரிக்கப்பெற்றது. மேலும் இப்பொழுது தொழிற் பள்ளிக்கூடம் கட்டப்போகும் இடத்திற்கு அடுத்த 4 ஏக்ரா விஸ்தீரணமுள்ள நிலம் தொழிற் சாலை கட்டடம் கட்டும் வசதிகளை முன்னிட்டு வாங்க வேண்டுமென்று தெரிய வருவதால் மேற்படி நிலத்தை வாங்கவேண்டுமென்று சபையோர் தீர்மானித்தார்கள். இவ்வருடம் வேகமாக கட்டடம் கட்ட நமது கவர்ன்மெண்டார் அனுமதி அளிப்பார்களென்று எதிர்பார்ப்பதால் சென்ற வருஷம் செலவு போக மீதி நின்ற தொகையாகிய ரூ 5126-15-10 ஐயும் ஏற்கனவே பி எஸ்.ஜி. அண்டு சன்ஸ் அவர்களால் கட்டட பண்டுக்கென்கொடுத்திருக்கும் பத்தாயிரம் ரூபாயுடன் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. இவ்வருஷம் மகாசபை மீட்டிங்கு ஏப்ரல் மீ 15 தேதி கூட்டப்பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. பிறகு விஜயம் செய்தவர்களுக்கு தாம்பூலம் வழங்கப்பெற்று சபை இனிது நிறைவேறியது. டிரஸ்டிகளுள் பார்ப்பனரில்லாதது குறிப்பிடத்தக்கது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின்

### திரிச்சி, திருவாரூர், தரங்கம்பாடி, பிறையாறு, மாயவரம் முதலிய ஊர்களின் சுற்றுப்பிரயாணம்

ஸ்ரீமான் நாயக்கர் ஈரோட்டிலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை, காலை 5-மணிக்கு திருச்சி வந்து சேர்ந்தார். ரயில்வே ஸ்டேஷனில் திருச்சி தென் இந்திய நல உரிமைச் சங்கத்தாரால் கூட்டமாக வரவேற்று காரியதரிசி ஸ்ரீமான் தென்னூர் வேதாசலம் B. A B. L. அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு இளைஞர்கள் வந்து தற்கால நிலைமையைப்பற்றி விவாதித்துவிட்டுப் போனார்கள். மாலை 3-30 மணிக்கு திருச்சி ஜங்ஷன் தபாலாபீசுக்குப் பக்கத்தில் திருச்சி ரயில்வே தொழிலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலாளர் சங்கத்தைத் திறப்பதற்காக தொழிலாளர்களால் அழைத்துச் செல்லப்பட்டதும் அங்கு பெரிய தொழிலாளர் கூட்டத்தினிடையே நாகை தொழிலாளர் சங்கத்தைத் திறந்துவைத்து நாகை தொழிலாளர் சங்கத்தலைவர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு ஏராளமான தொழிலாளர்களும் மற்றும் சுற்றுப்பாக்கத்து ஜனங்களும் வந்திருந்தார்கள். திருச்சி தொழிலாளர் சங்கத்தலைவரால் ஸ்ரீமான் நாயக்கருக்கு ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்ததும் ஸ்ரீமான் நாயக்கர் தொழிலாளர்களும் தொழிலாளர் சங்கமும் என்பது பற்றி ஒன்றரை மணி நேரம் பேசினார். பிறகு தலைவரால் முடிவுரையும், சங்கக் காரியதரிசியால் வந்தனோபசாரமும் கூறப்பட்டு 5-30 மணிக்கு அங்கிருந்து நேரே திருச்சிகோட்டை டவுன் ஹாலுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் ஸ்ரீமான் டி. ஏ ஜ. ரத்தினம் அவர்கள் அக்கிராசனத்தில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டிருந்ததற்குச் சென்று அந்த 6-மணி முதல் 8-30 மணிவரையில் பார்ப்பனரல்லாதார் சங்கமும் பார்ப்பனரல்லாதார் கடமையும் என்பது பற்றிப்பேசிவிட்டு மறுநாள் காலை 6 மணி வண்டியில் திருச்சியிலிருந்து திருவாரூருக்குச் சென்றார். அங்கு திருவாரூர் ரயில்வே ஸ்டேஷனில் திருவாரூர் சேர்மென், கவுன்சிலர்கள் மற்றும் திருவாரூர், நாகை முதலிய இடங்களிலுள்ள பல வர்த்தகர்களும் நாகைத் தொழிலாளர்களும் மற்றும் சுற்றுப்புற மிராசுதார்களுமான பெருங்கூட்டத்தால் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டு நாயக்கருக்கென்று ஏற்பாடு செய்துவைத்திருந்த ஜாகைக்கு தேசபக்த சமாஜத்தின் வழியாகவும் திராவிட சங்கத்தின் வழியாகவும் அழைத்துச்செல்லப்பட்டார். அன்று மாலை திருவாரூர் கோவிலில் ஒரு பெரிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததில் ஸ்ரீமான் நாயக்கர் தலைமையில் திராவிட சங்கத்தாராலும் விஸ்வகர்ம சங்கத்தாராலும் தனித்தனி உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டு பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் அவசியமும் அதன் பலன்களும் என்பது பற்றி சுமார் 2-30 மணிநேரம் ஸ்ரீமான் நாயக்கரால் பேசப்பட்டது; பேசிவிட்டு அங்கிருந்து ராத்திரி வண்டியில் நாகப்பட்டணத்திற்குச் சென்றார். நாகை பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தாரால் உபசரிக்கப்பட்டு ஸ்ரீமான் காயரோகணம் பிள்ளை முதலிய பெரியவர்களிடம் தஞ்சை ஜில்லா மகாநாட்டைப் பற்றி பேசி விட்டு அங்கிருந்து ஸ்ரீமான் முருகேசம் பிள்ளை (ஸ்ரீமான் காயரோகணம் பிள்ளை சகோதரர்) அவர்களும் மாயவரம் எஸ். வி லிங்கம் பிள்ளை அவர்களும் இவர்களை அழைத்துப்போக பிறையாற்றிலிருந்து வந்திருந்த கனவான்களுமாக ரோட்டு வழியாய் பிறையாற்றுக்குச் சென்றார்கள். அங்கு ஊருக்குச் சமீபமாய்ச் சென்றதும் ஊர் எல்லைக்கு அருகில் மேளவாத்தியங்களுடன் ஸ்ரீமான்கள் கனகசபை நாடார் ராஜதுரை செட்டியார் மற்றும் பெரிய கூட்டத்தார் ஸ்ரீமான் நாயக்கரையும் "திராவிடன்" பத்திராதிபர் திரு கண்ணப்பரையும் வரவேற்று ஊர்வலமாக தரங்கம்பாடிக்கு அழைத்துச் சென்று அங்கு ஸ்ரீமான் இரத்தினசாமி நாடார் அவர்கள் பங்களாவில் தாமதிக்கச் செய்தார்கள். அங்கிருந்து மறுபடியும் மாலை 4 மணிக்கு வெடி இருவரையும் மற்றும் கதர் விஷயமாகவும் மகாத்மாவின் வருகை விஷயமாகவும் ஏஜெண்ட் செய்திருந்த அகில பாரத சர்க்கா சங்க காரியதரிசி ஸ்ரீமான் ராமநாதன் பி. ஏ. பி. எல். அவர்களையும் தரங்கம்பாடி, பிறையாறு இரண்டு ஊர்களிலும் ஊர்வலமாகவும் தெருக்கள் மாலை, கற்கண்டு, பழம், வெற்றிலை பாக்கு, சந்தனம், புஷ்பம் வினியோகித்துக்கொண்டும் வர பிறையாறு கடை வீதியிலுள்ள ஸ்ரீமான் நாடார் அவர்கள் பங்களாவுக்கு முன்னால் ஒரு பெரிய கூட்டம் ஸ்ரீமான் எஸ் ராமநாதன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்டு அங்கு பார்ப்பனரல்லாத சங்கத்தாரால் ஸ்ரீமான் நாயக்கருக்கும் ஸ்ரீமான் கண்ணப்பருக்கும் தனித்தனி உபசாரப் பத்திரமும் பொதுஜனங்களால் இருவருக்குமாக ஒரு உபசாரப்பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டு பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் தத்துவமும், அரசியல் புரட்டுகளும் என்பதைப் பற்றி ஸ்ரீமான் நாயக்கரும், பார்ப்பனரல்லாதார் சங்கத்தினால் ஏற்பட்ட நன்மைகள் என்பது பற்றி ஸ்ரீமான் கண்ணப்பரும், இன்றைய அரசாங்கம் மகாத்மாவின் வருகைப்பற்றியும் அக்கிராசனர் ஸ்ரீமான் எஸ் ராமநாதன் அவர்கள் முடிவுரையும் பேசி வந்தனோபசாரங்களுடன் 9-30 மணிக்கு கூட்டம் கலைந்தது. தரங்கம்பாடி நாடார் பங்களாவில் ஒரு பெரிய விருந்து நடத்தப்பட்டது. மறுநாள் காலை ஸ்ரீமான்கள் நாயக்கருக்கும் கண்ணப்பருக்கும், கனகசபை நாடார் அவர்களுக்கும் திருக்கடையூர் காவிரிபூம்பட்டினம் செம்பொன்னார்கோவில் முதலிய இடங்களுக்குச் சென்று தஞ்சை மகாநாட்டு விஷயமாய் அங்குள்ள பெரிய மனிதர்களைக்கண்டு பேசி விட்டு நேரே மாயவரம் சென்று அங்கு ஸ்ரீமான் நாயக்கர் மகாநாடு விஷயமாய் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை முதலிய கனவான்களைக் கண்டுபேச தங்கிக்கொண்டார். மற்றவர்கள் மறுபடியும் தரங்கம்பாடிக்குச் சென்று அன்று மாலை தரங்கம்பாடி நாடார் பங்களாவுக்கு எதிரில் ஒரு பெரிய கூட்டத்தில் ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்கள் பார்ப்பனரல்லாதார் சங்கம் என்பதைப்பற்றி பேசிவிட்டு இரவு 10-30 மணிக்கு மாயவரத்திற்கு வந்து விட்டார். ஸ்ரீமான் நாயக்கரும் மகாநாடு விஷயமாய் சில ஏற்பாடுகள் செய்துவிட்டு இருவருமாக சென்னைக்குப் பிரயாணமாகி சென்னை காலையில் சேர்ந்தார்கள். அன்று மாலை சென்னத்திரியமகாலில் பார்ப்பனீயப்புரோகித பஹிஷ்கார சங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் ஆரம்ப பிரசங்கமாக பார்ப்பனீயப் புரோகிதமும், மதப்புரட்டும் என்பதாக ஒரு உபந்நியாசம் செய்துவிட்டு அன்றிரவு ஈரோட்டிற்கு பிரயாணமாகிவிட்டார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

சேர்வாம் பட்டியில் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம்:— திருச்செங்கோடு தாலூகா மணலி கிராமம் சேர்வாம் பட்டியில் 19—3—27 ந்தேதியில் திருச்செங்கோடு ஸ்ரீமத் ஸ்ரீதர சுவாமிகள் அவர்கள் தலைமையின் கீழ் பிராமணரல்லாதார் கூட்டமொன்று கூடிற்று. அதுகாலை அக்கிராசனர் ஸ்ரீமத் ஸ்ரீதர சுவாமிகள் பார்ப்பனர்கள் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் புரட்டுகளை எழுதி வைத்து நம்மை அடிமைப்படுத்தியிருப்பதையும், இன்னும் அவ்வாறு அடிமைப்படுத்திக்கொண்டு வருவதையும், ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட நாள் முதற்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்குச் செய்திருக்கும் உதவியையும், இனி இவ்வூரில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் ஒன்று அவசியம் இருக்கவேண்டியதைப் பற்றியும் சுமார் 2 மணி நேரம் ஜனங்கள் மனதைக் கவரும்படியாக உதாரணத்துடன் எடுத்துக் கூறினார். பிறகு கே. ஆர். ராஜன் அவர்கள் கல்வியைப்பற்றி உருக்கமாகப் பேசி முடித்தபின் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது, ஸ்ரீமான்கள் ஆர். கே. ராஜன் தலைவராகவும், எஸ். ராமசாமி கவுண்டர் உபதலைவராகவும், மாரிமுத்துக் கவுண்டர் காரியதரிசியாகவும், பெரியண்ணன் பிள்ளை, ஆர். ஸ்ரீரங்க கவுண்டர் வெங்கடாசலம் செட்டியார், ராமலிங்க செட்டியார் முதலியவர்கள் மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

---


திருவண்ணாமலை:— திராவிட மக்களின் முன்னேற்றங்கருதி இந்நகர்ப்பெரியார்களால் சென்ற 6-2-27 ல் நமது திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் தலைமையில் துவக்கப்பெற்ற தென் இந்தியா நலவுரிமைச்சங்கத்தீர்மானப்படி நிகழும் 11-3-27 ல் நமது சென்னை "திராவிடன்" பத்திராதிபர் திரு. சனக-சங்கர-கண்ணப்பர் அவர்களால் கதர் ஆலயம் திறக்கப்பெற்றதென காரியதரிசி ஸ்ரீமான் வே. மு, சாமி செட்டியார் அறிவிக்கிறார்.

# மேட்டூர் திட்டம்.

"மேட்டூர் அணை திட்டம்" விஷயமாய் அதிலுள்ள ஊழல்களையும் தனிப்பட்ட வகுப்பினர் நன்மைக்காக நமது பணம் எவ்வெவ் வழிகளில் விரயமாயிருக்கிறது என்பதுபற்றியும் "ஜஸ்டிஸ்" பத்திரிகை கொஞ்சநாளைக்கு முன் பொதுவாக சில குறிப்பு எழுதி இருந்ததற்காக சட்ட மெம்பர் ஸ்ரீமான் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்டசபையில் வெகு ஆத்திரமாகவும் ஆணவமாகவும் அலட்சியமாகவும் அப்பத்திரிகையின் பேர் சொல்லாமல் மறைமுகமாய் அவமதித்துப் பேசியதும் "இதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்" என்று "வீர முழக்கம்" செய்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதன் பேரில் "ஜஸ்டிஸ்" பத்திரிகையானது அத்திட்டத்தின் உள் ரகசியங்களையும் புரட்டுகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் புட்டு புட்டு விளக்கி மேட்டூர் திட்டத்தின் புரட்டு என்கிற தலையங்கத்தில் 3, 4 வியாசங்கள் எழுதினதுடன் சர். சி. பி. அவர்களை குற்றவாளியாக்கி விசாரணை வைக்கவேண்டுமென்று எழுதி வந்ததும் வாசகர்களுக்கு தெரிந்திருக்கும். அதின் பேரில் சர். சி. பி. அவர்கள் பெட்டியில் பாம்பு அடங்கினது போல் அடங்கி விட்டதோடு தான் எந்த பத்திரிகையை லட்சியம் செய்யப்போவதில்லை எந்த பத்திரிகைக்கும் பயப்படப்போவதில்லை என்றோ அப்பத்திரிகையையே லட்சியம் செய்து அரசாங்க தோரணையில் ஒரு விளம்பரம் செய்து மக்களுக்கு சமாதானம் சொல்ல வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார். அவ்விளம்பரமானது "ஜஸ்டிஸ்" பத்திரிகையிலும் "திராவிடன்" பத்திரிகையிலும் சட்டமெம்பர் மீது சுமத்தப்பட்டிருந்த ஒரு குற்றத்துக்காவது பதில் சொல்லுவதாயில்லாமல் பூசி மெழுகி பாமர மக்களை ஏமாற்றி பணத்தைப் பாழ்பண்ணச் செய்வதாயிருக்கிறதே யல்லாமல் இவ்வளவு பணம் கோடிக்கணக்காய் கொள்ளை போகிறதே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களை ஒரு கடுகளவாவது சமாதானப்படுத்துவதற்கு லாயக்கில்லாததாகவே இருக்கிறது.

"ஜஸ்டிஸ்" பத்திரிகையானது மேட்டூர் திட்டத்தின் ஊழல்கள் விஷயமாய் எழுதியிருப்பதின் சாராம்சமென்னவென்றால், இத்திட்டத்தின் கருத்தானது பொது மக்களின் நன்மையை யுத்தேசித்ததல்லவென்றும் பார்ப்பன அதிகாரிகளும் பார்ப்பன பென்ஷன் அதிகாரிகளும் மற்றும் பார்ப்பன மிராஸ்தார்களும் ஆகவே முன் கூட்டியே பட்டுக்கோட்டை தாலூக்காவில் முக்கியமாக அங்குள்ள புன்செய் நிலங்களை யெல்லாம் மிகவும் சலீசான விலையில் வாங்கி வைத்துக்கொண்டு காவேரி தண்ணீரைக்கொண்டு போய் பாய்ச்சிக்கொள்ள ஷை பார்ப்பன அதிகாரிகள் செய்து கொண்ட ஏற்பாடு தான் மேட்டூர் திட்டமே அல்லாமல் மற்றபடி இத்திட்டத்தால் நம் நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்களும் சமமாய் ஒருவித பயனும் அநுபவிக்க முடியாதென்பதும், இத்திட்டத்திற்காக கடன்வாங்கிச் செலவு செய்யப்படும் பணத்திற்குத் தகுந்த வட்டி கூட இதில் கிடைக்க முடியாதென்பதும் இத்திட்டத்திற்காக செலவு செய்த பணத்திற்கு ஏற்படும் வட்டிக்குக்கூட மற்ற ஜனங்களால் செலுத்தப்படும் வரியிலிருந்தெடுத்துக் கொடுக்க வேண்டி வருமென்பதும், இத்திட்ட தண்ணீரைப் பெரும்பாலும் அநுபவிக்கிறவர்களான ஷை பார்ப்பனர்கள் "நாங்கள் ஏக்கராவுக்கு விதிக்கப்பட்டிருக்கிற 15 ரூ. கந்தாயம் கொடுக்க மாட்டோம்; ஐந்து ரூபா வீதம் தான் கொடுப்போம் பெற்றுக் கொள்ள இஷ்டமில்லையானால் உங்கள் தண்ணீர் எங்களுக்கு வேண்டியதில்லை; புன்செய் வேளாண்மை செய்து கொள்ளுவோம்" என்று சொல்லி விடுவார்களானால் சர்க்காரார் பேசாமல் ஒப்புக்கொண்டு அவர்கள் கொடுக்கிற பணத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமே தவிர மற்ற நீர்ப்பாசனங்களில் பலனையனுபவிக்கிறவர்கள், கிடைத்த தண்ணீரை அநுபவித்துக்கொண்டு விதித்த தீர்வையைக் கொடுத்துத் தான் தீரவேண்டுமென்று சட்டப்படி கட்டுப்பட்டிருப்பது போல் மேட்டூர் திட்டத்தின் தண்ணீர் அநுபவிக்கும் பார்ப்பனர்களுக்கு ஒருவித கட்டுப்பாடாவது, சட்டமாவது, ஒப்பந்தமாவது இல்லை யென்பதும் இத்திட்டமானது சரியானபடி ஆராய்ச்சியுடன் நிறைவேற்றப்பட்டதல்லவென்பதும், அந்த இலாகா சம்பந்தமான நிபுணர்களுடைய அபிப்பிராயம் மாறுபட்டிருக்கிற தென்பதும் இத்திட்டத்திற்காக செலவிடும் பெரும் பகுதியான பணங்களெல்லாம் யந்திரங்களுக்காகவும் சாமான்களுக்காகவும் வெளிநாடுகளுக்குப் போகவும் பார்ப்பன அதிகாரிகளும் வெள்ளைக்கார அதிகாரிகளும் மாதம் ரூ 1000. 2000, 3000 கணக்காகச் சம்பளங்கள் பெறவும் அவர்களுடைய பிள்ளை குட்டிகளும் சுற்றத்தார்களும் சில்லரை உத்தியோகங்களை அநுபவிக்கவும் காண்ட்ராக்ட் பலனை அநுபவிக்கவும் உபயோகப்படும்படியாக இருக்கிறதே யல்லாமல் பொது ஜனங்களெல்லாரும் சமமாய் அநுபவிக்கும் மாதிரியாயில்லை யென்பதும் ஆகிய இன்னும் பலவித கருத்துக்கள் கொண்ட குற்றங்களைச் சுமத்தியிருக்கிறது. இவற்றிற்கு ஒன்றிற்காவது சட்ட மெம்பர் சரியான பதில் சொல்லாமலும் இத்திட்டத்தை சட்டசபையில் நிறைவேற்றுவதற்கு முன் சட்ட மெம்பர் என்னென்ன சொன்னாரோ அவைகளை யெல்லாம் லட்சியம் செய்யாமல் இப்போது அதற்கு நேர்விரோதமாய் மாற்றிச் சொல்லியும் வருகிறார். சாதாரணமாக நமது சர்க்காரார் இம்மாதிரியான நீர்ப்பாசனங்களுக்கு திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாகவே அது நஷ்டம் அடையாமலும் அதினால் பின்னால் எவ்வித கஷ்டம் ஏற்படாமலும் இருப்பதற்கு ஒரு சட்டம் செய்து கொள்வது வழக்கம். இத்திட்ட விஷயத்தில் நமது சட்ட மெம்பர் சட்டம் செய்து கொள்ளாமல் காரியத்தை நடத்துகிறார் என்று "ஜஸ்டிஸ்" பத்திரிகை சாட்டிய குற்றத்திற்கு சட்ட மெம்பர் விளம்பர மூலமாய் பதிலளிக்கையில் என்ன சொல்லுகிறாரென்றால் அம்மாதிரியான சட்டம் இல்லாததினால் ஒன்றும் முழுகிப் போய்விடாதென்றும். பூமிக்குடையவர்கள் தங்களுடைய நன்மையை உத்தேசித்தே சர்க்கார் ஏற்படுத்துகிற வரியைக் கொடுத்துத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுவார்களென்றும் சமாதானம் சொல்லுகிறாரே யல்லாமல் ஏன் தான் சட்டம் செய்து கொள்ளவில்லை யென்பதற்கு சரியான பதில் சொல்லவில்லை. இதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த சட்ட மெம்பரே சட்ட சபையில் பேசும் போது என்ன சொல்லியிருக்கிறாரென்றால் இத்திட்டம் நிறைவேறுவதற்கு முன்னால் ஒரு சட்டம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அப்படி ஒரு சட்டம் செய்து கொள்ளாவிட்டால் பூமிக்குடையவர்களால் சர்க்காரார் நஷ்டமடையவேண்டி வந்து விடுமென்றும் சட்டமில்லாமல் இத்திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசாங்கத்தாரும் சீமை அரசாங்கத்தாரும் உத்தரவு கொடுக்க மாட்டார்கள் என்றும் ஆகையால் சட்டமேற்பட்டால் தான் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்றும் சொல்லியிருக்கிறார். முன்னுக்குப் பின் முரணானதும் கண்ணியத்திலேயே சந்தேகப்படத்தக்கதுமான இந்த விஷயமொன்றிருக்க மற்றொரு விஷயத்தைப் பற்றி கவனிப்போம். அதாவது இத்திட்டத்தின் பலனையடைய ஏற்கனவே பூமி வாங்கிவைத்துக்கொண்டிருக்கிறவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களென்றும் அவர்களிற் பெரும்பாலும் பென்ஷன் உத்தியோகஸ்தர்களும் சட்டந்தெரிந்தவர்களுமென்றும் முன்பே சொல்லியிருக்கிறோம். ஆகவே, ஷை பார்ப்பனர்கள் இப்பொழுது சட்டமெம்பர் செய்திருக்கும் குற்றத்தைத் தெரிந்தும் அதில் சர்க்காருக்குள்ள பலக்குறைவைத் தெரிந்துகொண்டும் தாங்களெந்த விதத்திலும் சர்க்காருக்கிவ்வளவு வரிதான் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்கிற தைரியத்தினால் "ஏக்கரா ஒன்றுக்கு 5 ரூ வீதம் தான் நாங்கள் வரிகொடுக்கமுடியும் அதற்கு மேல் கொடுக்க முடியாது. உங்களுக்கிஷ்டமிருந்தால் தண்ணீர் விடுங்கள் இல்லாவிட்டால் எங்களுக்குத் தண்ணீர் வேண்டியதில்லை, என்று ஷை பார்ப்பனர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாய் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுவதில்லை என்று சொல்லி விட்டார்களானால் அவர்களிடத்தில் வரி வசூலிக்க சர்க்காருக்குச் சட்டமெங்கே இருக்கிறது? இத்திட்டத்திற்காக சர்க்காரார் வாங்கின கடனுக்கு வட்டி கட்டுவதற்காக இத்திட்டத்தில் சம்பந்தப்படாதவர்களும் சர்க்காரார் கேட்கிற வரியை கொஞ்சமும் ஆக்ஷேபிக்காமல் கொடுத்துத்தீரவேண்டியவர்களும் மற்ற வேறு திட்டங்களின் நீரைப்பாய்ச்சிக்கொள்ளுகிறவர்களுமான தஞ்சை ஜில்லா குடியானவர்களிடமிருந்து தானே வசூலிக்க வேண்டும். அதோடு மேட்டூர் திட்டத்தின் தண்ணீரைப் பாய்ச்சிக்கொள்ளுகிற பார்ப்பன மிராஸ்தார்களிடமிருந்து அவர்கள் கொடுக்கிற வரியை வாங்கிக்கொண்டு அவர்களுக்குத் தண்ணீர் விட்டுத்தானே ஆகவேண்டும். விடுவதில்லை யென்று சர்க்கார் சொல்லி விடுமேயானால் அந்தத்தண்ணீரை

(இதன் தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே.

குடி அரசு.
அக்ஷய-௵ பங்குனி-மீ 14-உ

# அரசியல் வாழ்வு

## என்பது அயோக்யர்களின் வயிற்றுப் பிழைப்பு என்பதற்கு உதாரணம் இது போதாதா?

மகாத்மா காங்கிரசில் தலையிட்டு ஒத்துழையாமை கொள்கையை நாட்டி பஹிஷ்கார திட்டத்தையும் நிர்மாணத் திட்டத்தையும் நிறைவேற்ற உழைத்துவந்த காலத்தில் நாமும் நம்மைப்போன்ற அநேகரும் யாதொரு நிபந்தனையுமில்லாது குருட்டு நம்பிக்கையுடனே மகாத்மாவை பின்பற்றி உழைத்துவந்தது தமிழ்நாட்டில் பெரும்பாலோருக்கு தெரியாமல் இருக்காது. மகாத்மா ஜெயிலுக்கு போனவுடன் மேற்கண்ட பஹிஷ்கார திட்டத்திற்கும் நிர்மாணத் திட்டத்திற்கும் விரோதமாய் நமது நாட்டுப் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வந்த காலத்திலும் அதற்கு இடம் கொடுக்காமல் காங்கிரஸ் கட்டளையென்றும் காங்கிரஸ் கமிட்டி கட்டளையென்றும் கூட பார்க்காமல் அத்திட்டங்களை நிலைப்பிப்பதிலும் நிறைவேற்றுவதிலுமே வேலைசெய்து வந்ததும் அநேகருக்கு தெரிந்திருக்கலாம். இந்தச் சந்தர்ப்பங்களில் நம்மை நமது எதிரிகளான அரசியல் பார்ப்பனர்களில் பலர் காங்கிரசுக்கு துரோகியென்றும், தேசத்துரோகியென்றும், காங்கிரஸில் இருக்க யோக்கியதை அற்றவனென்றும், காங்கிரஸ் இருப்பதா இறப்பதா? என்றும், காங்கிரஸ் கமிட்டியை விட்டு நம்மை நீக்கிவிடவேண்டும் என்றும், நம்மை காங்கிரஸிலிருந்து நீக்கவும் நமது நடவடிக்கையை கண்டிக்கவும் பல கூட்டங்களும் கூட்டினதும், காங்கிரஸ் விதிப்படி நாம் காங்கிரஸ் கமிட்டியில் இருக்க சட்டம் இடங்கொடுக்கவில்லையென்று சொல்லி நமது ஸ்தானத்தில் வேறு ஒருவரை நியமித்ததும் அநேகருக்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை.

அதோடு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்த காலத்தில் அத்தீர்மானம் காங்கிரஸ் கட்டளைப்படி இல்லாததால் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லி அவரையும் ராஜீனாமாக் கொடுக்கச் செய்ததுடன் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் இஷ்டப்படி நடக்க காங்கிரஸ் இடங்கொடுக்கவில்லை என்கிற காரணத்தால் அவரும் ராஜீனாமா கொடுத்து வெளியேறவும் ஆகவே இவ்வளவு பேர்கள் சம்பந்தமும் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலக நேரிட்டபோதிலும் லக்ஷியமில்லாமல் காங்கிரஸ் கட்டளை காங்கிரஸ் திட்டம் காங்கிரஸ் கட்டுப்பாடு என்று சொல்லிக்கொண்டு சுவாதீன புத்தி உள்ளவர்கள் எல்லோரையும் வெளியாக்கிவிட்டு குலாமர்களையும் கூலிகளையும் கூடச் சேர்த்துக் கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி பதவி பெற்ற பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் காங்கிரசை மதித்திருக்கிறார்கள்? எவ்வளவு தூரம் காங்கிரஸ் கட்டளைப்படி நடக்கிறார்கள்? எவ்வளவு தூரம் காங்கிரஸ் கட்டுப்பாடுகளுக்கு இணங்குகிறார்கள்? என்பது இவ்வாரம் சட்டசபையில் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து முழு மூடர்களும் அறிந்திருக்கலாம் என்றே நினைக்கிறோம். உதாரணமாக கடைசி காங்கிரஸ் அதாவது கௌஹாத்தி காங்கிரசின் கட்டளை என்ன என்பதை முதலில் ஆராய்வோம்.

"இந்திய சட்டசபையிலும் மாகாண சட்டசபையிலுமுண்டான காங்கிரஸ்காரர்கள் எல்லா விஷயங்களிலும் எதிர்ப்பையே முக்கிய கொள்கையாய்க் கொள்ளவேண்டியது.' தேசியக் கோரிக்கைக்கு அரசாங்கத்தார் இணங்குகிறவரை அரசாங்கத்தால் கொடுக்கப் பெறுதற்குரிய உத்தியோகங்களை மறுத்துவிடவேண்டும். மற்ற கட்சியார்களால் மந்திரி சபை அமைக்கப்படுவதை எதிர்க்கவேண்டும். செலவுகளுக்கு அனுமதி மறுக்கவேண்டும். வரவுசெலவு திட்டங்களை நிராகரிக்கவேண்டும்,.........."

இதுகளைச் சொல்லிக்கொண்டுதான் பாமரர்களிடம் ஓட்டுப்பெற்றார்கள். இதுகள் எல்லாம் பார்ப்பனீயப் புரட்டென்றும் மோசமென்றும் பார்ப்பனரல்லாதார் கட்சியை ஒழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தச் செய்யும் சூழ்ச்சிகள் என்றும் அப்பொழுதே நாம் எழுதியிருந்தோம். அதாவது 2—1—27 "குடி அரசில்" காங்கிரஸ் தீர்மானத்தைப்பற்றி எழுதியிருப்பதாவது:—

"காங்கிரஸ் தீர்மானங்களில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது 4-வது தீர்மானமாகிய சட்டசபை தீர்மானமேயாகும். இத்தீர்மானம் எவ்வளவு தூரம் பாமரமக்களை ஏமாற்ற ஏற்பட்ட தீர்மானம் என்பதை அறியவேண்டுமானால் இத்தீர்மானம் விஷயாலோசனைக் கூட்டத்தில் பிரேரேபிக்க ஆரம்பித்தவுடனே அங்கு இருந்த மகாத்மா காந்தி உடனே எழுந்து வெளியேறி விட்டதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.............. ..........
தங்களுக்கு மெஜாரிட்டி வரும்வரை சர்க்காருக்கு இணங்கிவாழ்வதில்லை என்று சொல்லிக்கொண்டு காலை தட்டவே தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லாமலும் இப்போது சுயேச்சைக் கட்சிமந்திரி சபை அமைத்தது என்பது பேருக்கு மாத்திரம் ஸ்ரீமான் சுப்பராயனை ஒழிய உண்மையில் "சுயராஜ்யக் கட்சி" பார்ப்பனரும் "ஒத்துழைப்பு" பார்ப்பனரும் "ஒத்துழையா" பார்ப்பனரும் ஆகிய எல்லோரும் சேர்ந்தே தான் அமைத்திருக்கிறார்கள். உண்மையில் சுயராஜ்யக் கட்சியார் திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதாக வாக்களித்திராவிட்டால் ஸ்ரீமான் சுப்பராயன் மந்திரிசபை அமைக்க தைரியம் கொண்டிருப்பாரா என்பதை வாசகர்களே யோசிக்க வேண்டும்..............இது ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருப்பதேயல்லாமல் வேறல்ல"

என்று எழுதி இருக்கிறோம். அப்போது நம்மேல் பலர் வருத்தப்பட்டிருந்தாலும் இப்போது என்னமாய் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனிக்கவேண்டுகிறோம். மந்திரிகளின் அமைப்பையே எதிர்க்கவேண்டியவர்கள் அமைப்புக்கு திருட்டுத்தனமாய் உளவாயிருந்ததோடு மந்திரிகள் பெயரில் ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத தீர்மானங்களுக்கும் ஓட்டு கொடுக்காமல் துரோகம் செய்து விட்டதும், சம்பளத்தைக் குறைக்க ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டு வந்த தீர்மானத்திற்கும் ஓட்டுக் கொடுக்காமல் துரோகம் செய்ததும் வரவு செலவு திட்டங்களை நிராகரிக்காமல், நிராகரிப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டு வந்த தீர்மானங்களுக்கு விரோதமாய் காங்கிரஸ் கட்சியார் சுயராஜ்யக்கட்சியார் ஓட்டு கொடுத்து நிறைவேற்றி வைத்ததும் சட்டசபையில் இவ்வார வரவு செலவு திட்டவாதத்தை கவனித்தவர்கள் நன்றாய் அறிந்திருக்கலாம்.

இதிலிருந்து காங்கிரசுக்கு கண்ணியமிருக்கிறதா? காங்கிரசுகாரருக்கு கண்ணியமிருக்கிறதா? காங்கிரசில் ஆதிக்கம் பெற்ற சுயராஜ்யக்கட்சியினருக்கு கண்ணியமிருக்கிறதா? காந்தி சிஷ்யர்கள் ஒத்துழையாமைக்காரர் என்பவர்களுக்கு கண்ணியமிருக்கிறதா? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பார்த்தால் தெரியாமல் போகாது. யாரோ நாலு பார்ப்பனர்கள் காங்கிரசு என்றும் காந்தியென்றும் கதர் என்றும் சுயராஜ்யமென்றும் மிதவாதமென்றும் ஆளுக்கொருகட்சி பெயரைச் சொல்லி ஒவ்வொரு கட்சியில் இருந்து அதைப்பற்றிக் கொண்டு தாங்களே தேசபக்தர்கள் தாங்களே மகாத்மா பக்தர்கள் தாங்களே கதர் பக்தர்கள் தாங்களே மதுவிலக்கு பக்தர்கள் தாங்களே மிதவாதிகள் என்பதாக வேஷம் போட்டுக்கொண்டு, பாமர நலக்காரரையும் சுயமரியாதை இல்லாதவர்களையும் வயிற்றுச்சோற்று தேச பக்தர்களையும் கூலி கொடுத்துச் சேர்த்துக் கொண்டு பொய்ப் பிரசாரம் செய்தும் மக்களுக்கு லஞ்சம் லாவண்யம் கள்ளு சாராயம் வாங்கிக் கொடுத்து ஓட்டுப்பெற்று பதவிகள் அடைந்து தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளுவதோடு பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழிக்க முயலுவதே இத்தனை கட்சிகளுடையவும் கொள்கைகளாக வைத்துக் கொண்டு நம்மை ஏமாற்றுவது இதிலிருந்தாவது தெரிகிறதா இல்லையா?

என்று தான் கேட்கிறோம்.

சர்க்காரையும் மந்திரிகளையும் ஜஸ்டிஸ் கட்சியார் எதிர்க்கவும் சுயராஜ்யக் கட்சியார் ஆதரிக்கவும் யாராவது சுயராஜ்யக் கட்சியாரை "ஏனையா நீங்கள் காங்கிரஸ் கட்டளைப்படி சர்க்காரையும் மந்திரிகளையும் எதிர்க்கவில்லை" என்று கேட்டால் அதற்கு கொஞ்சமாவது மானம் வெட்கம் ரோஷம் சுயமரியாதை நாணயம் ஒன்றுமில்லாமல் இந்த மந்திரிகள் போனால் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் வந்துவிடுவார்கள். ஆதலால்தான் எதிர்க்காமல் இருப்பதோடு சர்க்காருக்கும் மந்திரிக்கும் ஆதரவளிக்க வேண்டி இருக்கிறது என்று சொல்லுகிற ஒரு கூட்டம் இன்றைய தினம் நம நாட்டு மக்களுக்கு அரசியல் சுயராஜ்யம் வாங்கி கொடுக்கிறவர்கள் என்று சொல்லப்படுவார்களானால் இந்த நாட்டுக்கு இதைவிட வேறு என்ன அவமானமும் இழிவும் வேண்டி இருக்கிறது? என்று தான் கேட்கிறோம். தற்கால அரசியல் அமைப்பில் யார் தலையிட்டாலும் இப்படிதான் நடக்க முடியும் என்று சொல்வது இதற்கு சமாதானமானாலும் அநேக பார்ப்பனர்கள் தான் அனுபவித்துக்கொண்டு நம்மை அழிக்க வேண்டுமே அல்லாமல் நம்மவர்கள் அனுபவித்துக் கொண்டு சுயமரியாதையும் சமத்துவமும் அடையக்கூடாது என்று நம்மவர்களிலேயே சொல்லுகிற சில அசடுகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

---

## "திராவிடன்"

"திராவிடன்" பத்திரிகையை நாம் ஏற்று அதற்கு பத்திராதிபராயிருந்து 'குடி அரசு' கொள்கையின்படி நடத்தலாமா என்கிற விஷயத்தில் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிய "வேண்டுகோள்" என்று தலையங்கமிட்டு ஒரு விண்ணப்பம் 6-3-27 தேதி "குடி அரசி"ன் தலையங்கமாக எழுதி இருந்தோம். பொறுப்புள்ள நண்பர்களை நேரிலும் கலந்து பேசினோம். அதற்கு இதுவரை ஐந்நூற்றுச் சில்லரை கனவான்கள் தனிமுறையிலும் 7, 8, சங்கங்களும் 3, 4 பொதுக்கூட்டங்களும் தீர்மான மூலமாகவும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கிறார்கள். அவற்றுள் 500 பேர் வரையிலும் மற்றும் சங்கங்களும் பொதுக் கூட்டங்களும் "திராவிட"னை ஏற்றுக் "குடி அரசு" கொள்கைப்படி நடத்தும்படியும் 20 பேர்கள் அவ்வொருவர் ஒவ்வொருவிதமாக அதாவது நிபந்தனை பேரில் தான் நடத்தவேண்டும் என்றும், உடல் நலம் கெட்டுப்போகும் என்றும், "குடி அரசு" குன்றி விடும் என்றும் வேறு பெயர் மாற்ற வேண்டுமென்றும், பிரசாரத்திற்கு போதுமான காலம் இல்லாமல் போய்விடுமென்றும் "தமிழ் நாடு" "திராவிடன்" ஆகிய இரண்டு தமிழ் தினசரிகளை நமது நாடு இடம் கொடுக்குமா என்றும், "ஜஸ்டிஸ்" கட்சியாரை நம்பி இறங்கினால் அவர்கள் "குடி அரசு" கொள்கைக்கு பணிபூர்வமாய்க் கட்டுப்பட்டு நடப்பார்களா என்றும், ஜஸ்டிஸ் கொள்கை ஏற்றுக்கொள்ள வேண்டி வந்துவிட்டால் நமது முயற்சிகள் பலனில்லாமல் போகுமென்றும் "குடி அரசு" "திராவிடன்" ஆகிய இரண்டு பத்திரிகை நடத்தினால் பணக்கஷ்டத்திற்காக ஊர் ஊராய் பிச்சை கேட்டுக் கொண்டு திரிய வேண்டி வரும் அப்படி ஆனால் நமது பிரசாரத்திற்கு மதிப்பு குறைந்து போகுமென்றும் ஆகிய பல விஷயங்களைப்பற்றி எழுதி இருக்கிறார்கள். இவற்றில் நடத்தும்படி சம்மதம் கொடுத்தவர்கள் எழுதி இருப்பதைப் பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. ஏனெனில் அது அவ்வளவும் இந்திரனே சந்திரனே கடவுளே ராமனே கிருஷ்ணனே..................

என்று பலவாறாக புகழ்ந்தும் உதவிபுரிவதாகவும் சுமார் 400 சந்தாதாரர்கள் போல் சேர்த்துக்கொடுப்பதாக வாக்களித்தும் 4, 5 கனவான்கள் பிரதிப்பிரயோஜனமில்லாமல் பத்திரிகைக்கு உழைப்பதாகவும் தங்கள் தங்களால் கூடுமானவரை சந்தா சேர்த்து அனுப்புவதாகவும் திரவியசகாயம் செய்வதாகவும், திராவிடனை ஒப்புக்கொண்டால் ஒழிய வேறு மார்க்கமில்லை என்றும், இம்மாதிரியாக அளவுக்கு மீறி புகழ்ந்தும் உற்சாகம் காட்டியும் எழுதி இருக்கிறார்கள். இவற்றில் எடுத்துக்கொள்ளும்படி எழுதிய 500 நண்பர்களின் அபிப்பிராயத்தை விட நிபந்தனையாகவும் விரோதமாகவும் எழுதின 20 கனவான்கள் அபிப்பிராயத்திற்கே அதிக மதிப்புக்கொடுத்து ஒரு வாரகாலம் இதே நினைவாயிருந்து யோசித்துப்பார்த்ததில் அவர்கள் எழுதி இருப்பதில் பெரும் பாகம் யோசிக்கவேண்டிய விஷயமே இருந்தாலும், வேறு பல கஷ்டங்கள் இருந்தாலும் இந்த சமயத்தில் நமது கொள்கைக்கு ஒரு தினசரி இல்லாதிருப்பது சரி அல்ல என்கிற முடிவுக்கே வரவேண்டியதாகி விட்டது. பணக்கஷ்டத்தைக்கூட நாம் அவ்வளவு பெரிதாய் நினைக்கவில்லை; எப்படியாவது நடத்தலாம் என்றும் மற்றபடி உள்ள கஷ்டங்கள் உண்மையானது தான் என்றாலும் வேறு என்ன செய்வது என்று யோசித்தே சில நிபந்தனையின் மேல் ஒப்புக்கொள்ளலாம் என்கிற முடிவுக்கே வந்து அந்நிபந்தனைகளையும் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு எழுதப்போகிறோம். அந்தப்படி அவர்கள் ஒப்புக்கொண்டார்களானால் ஏற்று கொஞ்ச காலத்திற்கு நடத்தலாம் என்றே இருக்கிறோம். மற்றபடி ஊக்கங்காட்டி எழுதிய நண்பர்கள் தயாராக சந்தாதாரர்களைச் சேர்த்து வைக்கும்படியாக வேண்டுகிறோம்.

---

## பார்ப்பன ஏமாற்றலும், மடாதிபதிகளின் மடமையும்,

நம் நாட்டு மடாதிபதிகளுக்கு வருஷம் 1000, 10000, 100000, 1000000, ரூபாய்கள் என்பதாக வருஷ வருமான வரும்படியான சொத்துக்களை நமது முன்னோர்கள் நம்மக்களின் அன்புக்கும் ஒழுக்கத்திற்கும் ஆத்மார்த்த விஷயங்களுக்குமாக உபயோகப்படவேண்டும் என்பதாகக் கருதி பொது நலத்திற்கு விட்டு அதை நிர்வகிக்க அக்காலத்தில் உண்மையாயும் யோக்கியமாயும் நடந்துவந்த சந்நியாசிகள் வசம் இப்பொறுப்பையும் விட்டுவந்தார்கள். ஆனால் இப்போது இப்பெரும் பொறுப்பேற்ற பொது நல ஸ்தாபனங்கள் எந்நிலையில் இருக்கிறது? என்பதும், இதை யார் அனுபவிக்கிறார்கள்? என்பதும், இதற்கு நிர்வாக கர்த்தாக்களாகிய சந்நியாசிகள் என்போரின் யோக்கியதை எப்படி இருக்கிறது? என்பதும் நாம் சொல்லவேண்டியதில்லை. இம்மாதிரியான மடங்களையும் தேவஸ்தானங்களையும் தர்மத்திற்காகவும் பொதுநலத்திற்காகவும் அக்காலத்தில் சொத்துக்கள் விட்ட தர்மவான்களின் இஷ்டப்படி யோக்கியமாய் நடந்து வருகிறதா என்பதை கவனிக்க இந்துமத பரிபாலன சட்டம் என்பதாக ஒரு சட்டம் இயற்றியதற்கு இம்மடாதிபதிகள் தங்கள் சுயநலத்திற்கும் போக போக்கியத்திற்கும் குறைவு வந்துவிடுமென்பதாகக் கருதி பார்ப்பனர்களுக்கு வக்கீல் பீசாகவும் லஞ்சமாகவும் பிச்சையாகவும் அழுத பணங்கள் கணக்குவழக்கில் அடங்காது என்றே சொல்லலாம். இவ்வளவு பணங்களைத் தொலைத்தும் தாங்கள் வெற்றிபெறவில்லையே என்கிற கவலையுடன் இன்னமும் ஏதாவது வழியுண்டா? என்று பார்ப்பதற்காக இரவும் பகலும் பார்ப்பனர்களின் பாதத்தில் விழுந்து அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் தோப்புக்கரணம் போட்டுக்கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் என்கிற ஒரு பார்ப்பனர் 30 லக்ஷம் ரூபாயில் ஒரு பெரிய தர்மம் செய்யப் போவதாகவும் அதாவது வட நாட்டில் ஒரு பெரிய சமஸ்கிருத பள்ளிக்கூடமும் கோவிலும் கட்டப் போவதாகவும் அதற்குப் பணம் வேண்டுமென்றும் இம்மட அதிபதிகளிடமிருந்து பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு திருவாவடுதுறை பண்டார சன்னதி அவர்களை கேட்டதற்கு அவர் வருஷம் 6000 ரூபாய் வீதம் பத்து வருஷத்திற்குக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டாராம். இவரைப்பார்த்து இனியும் மற்ற மட அதிபதிகளும் கொடுப்பார்கள். பிறகு ராஜாக்கள், ஜமீன்தார்கள், மிராசுதார்களும் கொடுப்பார்கள். ஏதாவது ஒரு வழியில் பார்ப்பானுக்குக்கட்டுப்படாத சுவாமியோ பண்டார சன்னதியோ ராஜாவோ ஜமீன்தாரோ, மிராசுதாரோ நாட்டுக்கோட்டையாரோ மற்று ஏதாவது செல்வமுள்ளவர்களோ நமது நாட்டில்மிகமிக அருமையானதால் இந்த பணம் கொடுத்துதான் தீரவேண்டி வரும். ஆனால் இப்பணம் எதற்கு உபயோகப்படப்போகிறது? டேராடூனில் சமஸ்கிருத பள்ளிக்கூடமும் கோவிலும் கட்டத்தான் உபயோகப்படும். ஆனால் தமிழ்ப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகவும் என்று வாயில் சொல்லி ஏமாற்றலாம். ஆனாலும் அங்குபோய் படிப்பதற்கு ஆள் எங்கே கிடைக்கும்? ஆதலால் அங்கும் 500, 600 பார்ப்பனப் பிள்ளைகள் பிழைக்கவும் கோவில் பிரவேசத்தில் வித்தியாசமில்லாத ஊரில்கூட கோவில்கட்டி வித்தியாசங்களை உண்டு பண்ணி இந்தியா முழுவதிலும் "சூத்திரர்கள்" உள்ளே போகக்கூடாது என்பதாக ஒரு நிரந்தர இழிவை உலகமுள்ளவரை நிலைக்கச் செய்யவுமதான் ஏற்படப்போகிறது. இச்சூழ்ச்சி தெரிந்தும் நமது மட அதிபதிகள் நமது பணத்தை அள்ளிக்கொடுத்து பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகள் ஆகிறார்கள் என்றால், நமது கதி என்னே! என்னே!! நமது மடாதிபதிகளின் மடமை என்னே! என்னே!!

## பத்திரப்பதிவு இலாகாக்களில் மக்களுக்கு சுயராஜ்ஜியக்கக்ஷியார் செய்த அக்கிரமம்.

சென்ற வாரத்தில் சென்னை சட்டசபை வரவு செலவு விவாதத்தின் போது பத்திரப் பதிவு இலாகா சம்பந்தமாக ஜனங்களுக்கு இப்போது இருக்கும் கஷ்டத்தை நீக்கும்படி அதாவது அதிகமாயிருக்கும் கட்டண விகிதத்தை குறைக்கும்படிக்கும் முக்கியமாக வெளியில்வர சவுகரியப்படாத பெண்களின் சவுகரியத்தை ஒட்டியும் காயலா முக்கியஸ்தர்களால் அவஸ்தைப் பட்டுக் கொண்டு படுத்த படுக்கையில் கிடக்கும் ஏழை குடியானவர்களுக்கும் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமானால் ரிஜிஸ்டர் கட்டணம் முன்னையவிட இப்போது சரி பங்கு அதிகமாய் விட்டதால் அதாவது சப் ரிஜிஸ்டிரார் வீட்டுக்கு வருவதற்குமுன்னால் 10 ரூ. கட்டணமாயிருந்தது இப்போது 20 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதை குறைத்து ஜனங்களுக்கு சவுகரியம் செய்யும்படி ஒரு தீர்மானம் ஜஸ்டிஸ் கக்ஷியாரால் கொண்டு வரப்பட்டது. இதை அறிந்த சுயராஜ்ஜியக் கக்ஷியார் இப்பெருமை ஜஸ்டிஸ் கக்ஷிக்கு விடக்கூடாது என்பதாக தாங்களும் இவ்விஷயத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்ததாய் ஜனங்களுக்கு காட்டுவதற்காக வேஷத்திற்காக ஒரு தீர்மானம் அனுப்பியிருந்தார்கள். அக்கிராசனர் சுயராஜ்ஜியக் கக்ஷியை சேர்ந்தவராயிருப்பதால் இம்மாதிரி தீர்மானங்கள் சுயராஜ்ஜியக் கக்ஷியார் பேரில் தான் வெளிவரக்கூடும் என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்காது. ஆகையால் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் பேரால் தீர்மானம் விவாதிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் கக்ஷி அங்கத்தினர்கள் அதிக கட்டணத்தில் உள்ள கஷ்டங்களை எல்லாம் நன்றாய் எடுத்துச் சொல்லி வாதாடினார்கள். ஆனால் கடைசியாய் ஓட்டு எடுக்கும்போது சுயராஜ்ஜியக் கக்ஷியார் வெளியே ஓடிவிட்டார்கள். இதன் பயனாய் அத்தீர்மானம் தோல்வி அடைந்து விட்டது. ஏழைகளுக்கு நன்மை செய்யும் சுயராஜ்ஜியக் கக்ஷியாரின் யோக்கியதையை உணர புத்திசாலிகளுக்கும் யோக்கியர்களுக்கும் இதைவிட வேறு சாக்ஷியம் தேவையில்லை என்றே சொல்லுவோம்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன தான் செய்வது? வேறு புது வாய்க்கால் வெட்டி வேறேந்த வழிக்காவது தண்ணீர் திருப்புவதானால் அந்தச் செலவுகளுக்குப்பிடிக்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு எங்கே போவது? ஆகவே மேட்டூர் திட்டத்திலுள்ள ஊழல்களும் சட்டமெம்பரின் குற்றங்களும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளும் நம்முடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மண்ணாங்கட்டி பொம்மைகளின் யோக்கியதைகளும் இவர்களுக்கு ஓட்டுக்கொடுத்தனுப்பிய ஓட்டர்களாகிய பாமர ஜனங்களின் பக்குவங்களும் தெரிந்து கொள்ள இந்த ஒரு விஷயமே போதுமானதென்று நினைக்கிறோம். மேட்டூர் திட்டத்திலுள்ள மற்ற புரட்டுகளை சாவகாசமுண்டான போது விவரிக்கலாம்.

## “வகுப்பு உரிமை” வேண்டாம் என்று சொல்லித்திரியும் போலிதேசாபிமானி தேசியவாதிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

நமது சென்னை அரசாங்கத்தின் 1925, 26-வது வருஷத்திய நிர்வாக அறிக்கைப்படி உத்தியோக விஷயங்களில் பின்கண்ட கணக்குகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சர்க்கார் உத்தியோகத்தை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது 1. கெஜட்டட் ஆபிசர் என்று சொல்வது இது குறைந்தது சுமார் 250 ரூபாய்க்கு மேற்பட்டு 5500 ரூபாய் சம்பளம் வரையில் வாங்கக் கூடியது. இரண்டாவது 100 ரூபாய்க்கு மேற்பட்டு 250 ரூபாய் வரை வாங்கக்கூடியது. மூன்றாவது 35-ரூபாய்க்கு மேற்பட்டு 100-வரையில் உள்ளது. ஆகவே இந்த மூன்று உத்தியோகத்திலும் பார்ப்பனர்கள் இவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றும் பார்ப்பனரல்லாதார் இவ்வளவு பெயர்கள் இருக்கிறார்கள் என்றும் கணக்கு போட்டிருக்கிறார்கள். இவ்வுத்தியோகங்களிலும் பார்ப்பனர்களே ஏகபோகமாய் அனுபவித்து வரும் நீதி இலாகா அதாவது முனிசீப் சப் ஜட்ஜி, ஜட்ஜிகள் முதலிய உத்தியோகங்களைப்பற்றி குறிப்பிடவே இல்லை. அதில்லாமலே உள்ள உத்தியோகங்களுக்கு சர்க்கார் குறிப்புப்படி எப்படி இருக்கிறது என்று பார்த்தால் நம்மில் நம்மவர்களுக்கு விகிதாசாரம் உத்தியோகம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்பவர்கள் வகுப்பு உரிமைக்காரரா? அல்லது வேண்டாமென்று சொல்லுகிறவர்கள் வயிற்றுச் சோற்று உரிமைக்காரரா? என்பது வெளிப்பட்டுவிடும். கணக்கு விபரம்:—

| | கெஜட்டட் ஆபிசர் உத்தியோகம் மாதம் 1-க்கு 250-க்கு மேற்பட்டு 5500 ரூபாய் வரை சம்பளம் பெறக் கூடியவர்கள் | மாதம் 1-க்கு 100 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறக் கூடியவர்கள் | மாதம் 1-க்கு 35-க்கு மேல் சம்பளம் பெறக் கூடியவர்கள் |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 402 | 3409 | 8197 |
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 215 | 1901 | 5238 |
| தாழ்ந்த வகுப்பார் ,, | — | 2 | 54 |
| மகம்மதியர்கள் | 53 | 323 | 1139 |
| கிறிஸ்தவர்கள் | 109 | 456 | 643 |

100-க்கு மூன்று விகிதம் உள்ள பார்ப்பனர் மொத்தம் 12008

100-க்கு 97 விகிதம் உள்ள பார்ப்பனரல்லாதார் எல்லோரும் சேர்ந்து 10133

இவற்றுள் 100-க்கு 25-விகிதம் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார் 56.

இதோடு முனிசிப்புஜட்ஜ்களின் கணக்குசேர்ந்தால் எப்படியிருக்கும் என்பதையும் இந்த கணக்கை வெளியிட்டவர்கள் அந்தக் கணக்கையும் வெளியிட ஏன் பயப்படுகிறார்கள்? என்பதையும் சுயராஜ்யம் வந்தாலும் இந்த கணக்கு தான் ஏற்படுமா அல்லது வேறு கணக்கு ஏற்பட வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்பதையும் யோசித்துப் பார்த்து வகுப்பு உரிமை வகுப்பு வாதம் வேண்டாமென்று சொல்லும் “தேசியவாதிகள்” வகுப்பு வாதம் அல்லது வகுப்பு உரிமை தவிர வேறு வழிகளால் முக்கியமாய் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் சமத்துவமடைய முடியுமா? என்பதையும் உத்தியோகம் பார்ப்பதும் “சுயராஜ்ஜியத்தில்” ஒன்று அல்லவா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

## பார்ப்பனிய மொழிந்த நீதிபதி

திருவண்ணாமலை கோவில் வழக்கு பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கட்சிச் சண்டையாயிருப்பதாலும் வழக்காரம்பத்தில் இருந்த ஒரு பார்ப்பனரல்லாத மாஜிஸ்ட்ரேட் மாற்றப்பட்டு விசாரணை காலத்தில் அந்த ஸ்தானத்திற்கு ஒரு பார்ப்பன மாஜிஸ்ட்ரேட் வரநேர்ந்து விட்டபடியாலும் இந்த வழக்கை பார்ப்பனரும் பார்ப்பனரல்லாத இந்துவும் அல்லாமல் ஒரு கிறிஸ்தவ அல்லது மகமதிய நீதிபதியிடம் மாற்றவேண்டுமென்று வாதி ஸ்ரீமான் ஜே. எஸ். கண்ணப்பர் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க அவ்வூர் டிப்டி கலெக்டரிடம (கிறிஸ்தவ மேஜிஸ்ட்ரேட்) மாற்றப்பட்டிருக்கிறது இந்த நிதிக்கு இதுவரை சுமார் 100 ரூபாவரை வசூலாயிருக்கிறது.

கும்பகோணம்:—‘நாயுடு மகாஜன சங்கத்தின்” முதல், இரண்டாவது மூன்றாவது வருஷ நிறைவுவிழா இம்மார்ச்சு மாதம் 27 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கும்பகோணம் திருநாராயணபுரத்திலுள்ள ஸ்ரீனிவாசராமானுஜ கூடத்தில் நடைபெறும். அப்போது எல்லோரும் விஜயம் செய்யும்படி வேண்டப்படுகிறார்கள் என்று ஸ்ரீமான் எஸ். ராமச்சந்திரன் அறிவிக்கிறார்.

அகில இந்திய 3வது நாயுடு மகாநாடு:— 1927௵ ஏப்ரல்௴ 15, 16, 17ம் தேதிகளில் நடக்கப்போகும் அகில இந்திய மூன்றாவது நாயுடு மகாநாட்டிற்கு கோயமுத்தூர்—பூளைமேடு ஸ்ரீமான் பி. எஸ். ஜி. கங்கா நாயுடுகாரு கம்மவார சங்கத்தாரையெல்லாம் ஒன்றுகூட்டி தங்களாலியன்றவளவு ஷை மகாநாட்டிற்குதவி செய்வதாக உறுதிமொழி கொடுத்ததற்கு மனப்பூர்வமான வந்தனம் செலுத்துகிறோம் என்று கோவை ஸ்ரீமான் டாக்டர் சி. வி. என். நாயுடு [மகாநாட்டுக்காரியதரிசி] அறிவிக்கிறார்.

## கோயமுத்தூர் நகர பரிபாலன சபையில் மீண்டும் பார்ப்பனீயக் குறும்பு.

கோயமுத்தூர் டவுனுக்கு சுத்தமான தண்ணீர் வசதி உண்டாக்க சிறுவாணி நதியிலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்து வேலை நடந்து வருவதில் இப்பொழுது தண்ணீர் வரி வசூலிக்க வேண்டியிருப்பதைப்பற்றி ஆலோசிக்கும் பொருட்டு கோவை டவுன் ஹாலில் 14-3-27 தேதி மாலை 5-15 மணிக்கு சேர்மன் ஸ்ரீமான் ராவ் பஹதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தலைமையின் கீழ் முனிசிபல் கவுன்சிலர்களின் கூட்டம் ஒன்று கூடியது. அன்று சேர்மன் முதலியாரவர்கள் காலத்தில் குழாய்த் தண்ணீர் கோயமுத்தூருக்கு உண்டாயிற்றென்று ஒரு கீர்த்தி எக்காலத்திலும் முதலியாருக்கு உண்டாகிவிடுமே என்ற பொறாமைகொண்ட சில பரியார்களின் தூண்டுதலின் பேரிலும் சில பார்ப்பனர் வக்கீல்களின் தூண்டுதலின் பேரிலும், ஒரு சிலர் கிளர்ச்சி செய்து நோட்டீஸ் முதலியன பிரசாரம் செய்தும், சிலரைக்கொண்டு தண்ணீர் வசதி தேவையில்லையென்றும் வரி கொடுக்க சக்தியில்லையென்றும், விண்ணப்பங்கள் கொடுக்கச் செய்தும், வீண் ஆர்ப்பாட்டங்கள் செய்திருந்தமையால் முனிசிபல் மீட்டிங்கு நடக்கும் இடத்தில் வேடிக்கை பார்க்க அநேக ஜனங்கள் வந்திருந்தனர். சேர்மன் உட்பட 30 கவுன்சிலர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர். கூட்டம் கூடியதும் தண்ணீர் வசதி தேவையில்லையென்று ஒரு சிலர் முனிசிபல் சபைக்கு செய்து கொண்ட விண்ணப்பங்கள் முதலியன ஆலோசனைக்கு வந்ததும் விண்ணப்பங்கள் சபையில் வாசிக்கப்பட்டதும், சேர்மன் அவர்கள் விண்ணப்பங்களின் நிலைமையைப் பற்றி சிறிது விளக்கிக்காட்டினார். அதாவது ஒவ்வொரு வார்டிலும் பல நூற்றுக்கணக்கான வரி செலுத்துபவர்களிருந்தும் நூற்றுக்கு 10 பேர்கள் கூட ஆக்ஷேபிக்கவில்லையென்றும் இப்பொழுது ஒவ்வொரு வார்டிலிருந்தும் வந்திருக்கும் ஆக்ஷேபணை விண்ணப்பங்களிலும் ஒரு நபரே 4, 5 விண்ணப்பங்கள் செய்து கொண்டிருக்கிறார்களென்றும், ஒவ்வொரு வார்டிலும் இத்தனை வரி செலுத்துவோர்களில் இவ்வளவு விண்ணப்பங்கள் தான் வந்திருக்கிறதென்ற புள்ளி விபரங்களை விளக்கியும், இப்பொழுது வந்திருக்கும் விண்ணப்பங்களைக் கொண்டு இதைவெகு ஜன ஆக்ஷேபணையென்று சொல்லுவதற்கு நியாயமில்லையென்றும், கோவைக்கு தண்ணீர் வசதி உண்டாக்க இப்போது அமுலிலிருக்கும் திட்டமானது புதிதாக ஏற்பட்டதல்ல, சுமார் 37 வருஷங்களாக பொது ஜனங்களாலும், முனிசிபல் சபையார்களாலும் தண்ணீர் வசதி உண்டாக்க வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறதென்றும் அதற்கு ரிக்கார்டுகள் இதோ இருக்கிறதென்றும், இப்பொழுது வரிவிதித்து ஜனங்களுக்கு கஷ்டத்தை உண்டாக்குவது தமது கருத்தல்லவென்றும் தற்காலம் 8½ பர்சண்டு வரி போடவேண்டிய அவசியமாயிருக்கிறதென்றும், அப்படிப் போடாவிட்டால் கவர்மெண்டார் கிராண்டு கொடுக்க சம்மதிப்பதில்லையென்றும், ஆகலால் வரி வசூலிக்க வேண்டியிருக்கிறதென்றும் உள்ள நிலைமையை சபையில் விளக்கிக்காட்டினார். உடனே வீண் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற கூட்டத்திற் சேர்ந்த பார்ப்பனர் கவுன்சிலரில் ஒருவரான ஸ்ரீமான் கே. ராமசாமி அய்யர் எழுந்து இப்பொழுது தண்ணீர் வரியை ஆக்ஷேபித்து வந்திருக்கும் விண்ணப்பங்கள் மிகச் சொற்பமானதென்றால் தண்ணீர் வசதி வேண்டுமென்று யாராவது எழுதியிருக்கிறார்களா? என்று கேட்டார். அதற்கு சேர்மனவர்கள் எப்பொழுது 5ம் தேதிக்குள் ஆக்ஷேபணை சொல்லிக்கொள்பவர்களெல்லாம் சொல்லிக்கொள்ளலாம் என்று சொன்னேனோ, அதற்குள் ஆக்ஷேபித்து விண்ணப்பங்கள் செய்து கொண்டிருப்பவர்கள் போக ஆக்ஷேபிக்காமலிருப்பவர்களெல்லாம் தண்ணீர் வசதி வேண்டுமென்று சொல்லுபவர்களாகத்தான் கருத வேண்டுமென்று சரியான பதில் சொன்னார். மீண்டும் மேற்படி பார்ப்பன வக்கீல் தண்ணீர் குழாய் விஷயமாய் இதுவரை இவ்வளவு செலவாயிருக்கிறதென்று சொல்லமுடியுமா? இப்பொழுது வேலையாயிருப்பதை இத்துடன் நிறுத்திவிட்டால் எவ்வளவு நஷ்ட மேற்படுமென்று சொல்ல முடியுமா? என்று கேட்டார். அதற்கு சேர்மனவர்கள் செலவு கணக்குப்பார்த்துத்தான் சொல்ல முடியுமென்றும், 14 மைலுக்கு குழாய் பதித்தாயிற்றென்றும், வேலையை நிறுத்தினால் சுமார் 22 லக்ஷ ரூபாய் நஷ்டமாகலாமென்றும், வேலையை நிறுத்த முடியாதென்றும் பதில் சொன்னார். மீண்டும் பார்ப்பன வக்கீல் இப்பொழுது போடுகிறவரிக்கு மேல் எப்பொழுதும் இனிவரி அதிகப்படுத்துவதில்லையென்று தீர்மானிக்க முடியுமா எனக்கேட்டார். கவுன்சிலர்கள் இஷ்டமான்படி தீர்மானிப்பதில் தமக்கு ஆக்ஷேபணையில்லையென்று சொன்னார். கடைசியாக பார்ப்பன வக்கீல் தமது வெறும் பேச்சை அத்துடன் அடக்கிக்கொண்டார். சேர்மனவர்கள் தண்ணீர் வரியும் வீட்டு வரியுமாகச்சேர்ந்து 15½ பர்சண்டு வரி வசூலிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை கவுன்சிலர் ஆலோசனைக்குக் கொண்டுவந்து பிரேரேபணை செய்தார். அந்தத்தீர்மானத்தில் சில வாசகங்களைத் திருத்த வேண்டுமென்று ஸ்ரீமான் சாமமூர்த்தி அய்யர் கேட்டுக்கொண்டார். சேர்மனவர்கள் அதை ஏற்றுக்கொண்டார். ஸ்ரீமான் வக்கீல் ராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் 15½ பர்சண்டு வரியை 12½ பர்சண்டாக்க் குறைக்கவேண்டுமென்று ஒரு திருத்தப்பிரேரேபணை கொண்டுவர அனுமதிகேட்டார். சேர்மனவர்கள் வரியைக்குறைக்கமுடியாமலிருக்கும் காரணத்தைச்சொல்லிவிட்டு தமது பிரேரேபணையைக் கவுன்சிலர்கள் ஆக்ஷேபித்து விட்டால் தாங்கள் தங்கள் தனித்தீர்மானம் கொண்டுவர ஆக்ஷேபணையில்லையென்று சொல்லிவிட்டார். அதற்கு மேல் சேர்மனவர்கள் தமது தீர்மானத்திற்கு கவுன்சிலர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லலாம் எனக்கேட்டார். ஒருவரும் ஒன்றும் பேசவில்லையானாலும் பழைய படி வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டது என்ற பழமொழிப்படி பார்ப்பன வக்கீல் ஸ்ரீமான் ராமசாமி ஐயர் எழுந்து தாம் 10 நிமிஷம் பேசவேண்டுமென்றுகேட்டார். சேர்மனவர்கள் 5 நிமிஷம் கொடுத்தார். ஐயரவர்கள் தண்ணீர்க்குழாய் வேலையை நிறுத்தி விட்டு நஷ்டத்தை முனிசிபாலிட்டியார் ஏற்றுக்கொள்ளலாம என்ற பழைய பாடத்தை 5 நிமிஷம் படித்து விட்டு தண்ணீர்க்குழாய் விஷயமாக கவர்மெண்டுக்கும் நமக்கும் நடந்திருக்கும் எக்கிரிமெண்டைக் காட்டமுடியுமா? எனக்கேட்டார். சேர்மன் சகலகடிதப்போக்குவரத்து ரிக்கார்டு பையிலையும் இதோ பாருங்கள் என எடுத்துக் கொடுத்துவிட்டார். ஐயரவர்கள் அதிகமாயிருக்கிறது படிக்க நேரமாகுமென்று சொல்லிஉட்கார்ந்து விட்டார். கடைசியாக சேர்மனவர்கள் அசல் தீர்மானம் ஓட்டுக்குவிடப்பட்டது. 23 கவுன்சிலர்கள் தீர்மானத்திற்கு சாதகமாகவும் 4 கவுன்சிலர்கள் பாதகமாகவும் ஓட்டுக்கொடுத்தனர் இருவர் நடுநிலைமை வகித்து விட்டனர் தீர்மானம் நிறைவேறி விட்டதும் கூட்டம் கலைந்தது.

குறிப்பு — 8½ பர்சண்டு வரி கொடுக்காவிட்டால் கவர்ன்மெண்டார் கடன் கொடுப்பதில்லை. கடன் வாங்காவிட்டால் குழாய் வேலைத்திட்டம் நடைபெறப்போவதில்லை. நடந்த வேலை நிறுத்த வேலையோ 4-ல் 3 பாகம் நடந்து விட்டது. இத்துடன் நிறுத்தி முனிசிபாலிட்டியார் நஷ்டத்தை ஏற்றுக் கொள்வதுவிட தண்ணீர் வசதியை உண்டாக்கிக்கொண்டு அந்த நஷ்டத்தை ஏற்றுக் கொண்டாலென்ன? தண்ணீரும் வேண்டும் வரி கொடுக்கவும் கூடாது என்றால் என்ன அருத்தம்? மீசைகரும் ஆசை கூழுக்கும் ஆசையா? என்ன செய்தும் இவ்வளவு பொய்க்கிளர்ச்சிகளும் சேர்மென் ஸ்ரீமான் முதலியார் பேரில் பொறாமை கொண்ட சிலரால் கட்டுப்பாடாகவேண்டுமென்றே அச்சசல் போட்டு முதலியாரிடம் பொது ஜனங்களுக்கிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையும் செல்வாக்கையும் கெடுத்து அந்த ஸ்தானத்தில் பார்ப்பன ஆதிக்கமாக்க செய்யப்பட்ட சூழ்ச்சியே அல்லாமல் வேறல்ல. ஆனாலும் இன்னும் பார்ப்பனீய நாடகம் என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

(கண்ணாற்கண்டோன்)

---

திரிசிராபுரம் சைவசித்தாந்த சபை;—பல காரணங்களை முன்னிட்டு திருவாளர் உ. க. பஞ்சாக்ஷரம் பிள்ளையவர்கள் இச்சபையின அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டார். தமிழாசிரியர் திருவாளர் ம. பெரியசாமி பிள்ளையவர்கள் அப் பதவியை ஒப்புக்கொண்டு நன்கு நடத்திவருகின்றார்கள். இச்சபையினரால் காரைக்காலம்மையாரின் திரு நக்ஷத்திரத்தை முன்னிட்டு பங்குனி மாதம் 7ந்தேதி அரசங்குடி தமிழ்ப்பண்டிதர் திருவாளர் அ. மு சரவண முதலியாரவர்கள் "காரைக்காலம்மையார்" என்பது பொருளாக ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று திரு. கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளையவர்கள் அறிவிக்கிறார்.

---

## மதிப்புரை.

[வி. ரா.]

**நம்பாடுவார் சரிதை:**—இது சென்னை பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால் அகவற்பாவில் இயற்றப்பட்டது. நல்ல செந்தமிழ் நடை. இதில் நம்பாடுவாரின் அன்பையும் வாய்மையையும் தெளிவுறக் காணலாம். பௌல்கலாசாலைத் தமிழ்ப் புலவர் திருவாளர் கு. மதுரை முதலியாரவர்கள் எழுதிய குறிப்புரையுடன் கூடியது. விலை அணா 0—4—0

கிடைக்குமிடம்;—

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
27 தாதாமுத்தியப்பன் தெரு, சென்னை.

---

**பஞ்சமனென்னும் பழிச்சொல்:**—இந்நூல் பண்டைக் காலத்தில் பஞ்சமன் என்னும் ஒரு சாதியே கிடையாதென்பதையும் இந்தப் பஞ்சமன் என்னும் பழி ஆரியரால் ஏற்பட்டதென்பதையும் அதற்குப் பழைய சாஸ்திரங்களில் கொஞ்சங்கூட ஆதாரமில்லை என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது. இந்நூலின் முதற்பக்கத்திலும் பின்பக்கத்திலும் குறள், திருவாய்மொழி, தேவாரங்களிலுள்ள சமதர்மத்தைப் போதிக்கும் பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

வேண்டுவோர் சேலம் பட்டக்காரர் அச்சுக்கூட மானேஜருக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

**பூஜாபாகவதம் என்னும் ஸ்ரீ கிருஷ்ண தியானம்:**—இது வடமொழி பாகவதத்தின் சாரத்தை எளிய தமிழ்நடையில் விளக்குவது. பூஜா காலங்களில் படனம் பண்ணுவதற்குத் தகுதியானது. ஆக்கியோன் ஸ்ரீமான் வ. கிருஷ்ண சர்மா ஆசிரியர். விலை அணா 0—1—0.

விலாசம்:—

ஸ்ரீ வாணீவிலாச புத்தகசாலை,
79 சுப்பராய செட்டி வீதி,
திருப்பாதிரிப்புலியூர்.

---

**மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் பிரபவ வருஷ வாக்கிய பஞ்சாங்கம்:**—இது அருபத்தொரு வருடப் பஞ்சாங்கம், சோதிடப் பேரகராதி முதலிய சோதிட நூல்களினாசிரியர் மதுரை சோதிட வித்வான் எஸ். கூடலிங்கம் பிள்ளையவர்களால் கணிக்கப்பெற்றது. இதில் பிரபவ வருஷம் 12 மாத தினசரி பஞ்சாங்கக் குறிப்போடு வருஷ பலன், 63 நாயன்மார்களின் குருபூசை திருநட்சத்திரங்கள் ஆழ்வாராதிகளின் தினங்கள் கோயில் விழாக்களின் விபரங்கள் 27 நட்சத்திரங்களிற் செய்யும் சுபாசுப காரியங்களின் விபரம் விவாகப் பொருத்தங்கள், கோசார பலன் புக்திசித்திர விபரம் முதலிய இன்னும் அநேக சிறந்த விபரங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. இது 37 பக்கங்களில் பிழையறப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 0—3—0

கிடைக்குமிடம்:—

எஸ். கூடலிங்கம் பிள்ளை,
புத்தக வியாபாரம், புது மண்டபம், மதுரை:

---

**தமிழ்ச்சித்த வைத்திய 3 வது மகாநாடு சன்காட்சியும்:**—நாளது 1927 ஏப்ரல் மாதம் 10ந் தேதி முதல் 14-ந் தேதிவரை மதுரை திருமலைநாயக்கர் மாலில் நடைபெறும். அதற்கு வேண்டியவேலைகள் மிக சுறு சுறுப்பாய் நடந்து கொண்டிருக்கின்றன என்று திரு வி. சிவஞானயோகி (அமைச்சர்) அறிவிக்கிறார்.

---

**அகில இந்தியா மூன்றாவது நாயுடு மகாநாடு**

கோயமுத்தூர் 1927 ஏப்ரல் மீ 15, 16, 17உ களில் கோயமுத்தூரில் அகில இந்திய மூன்றாவது நாயுடு மகாநாடு கூடும். அம்மகாநாட்டிற்கு நாயுடு குலத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பாரும், ஆண் பெண் இருபாலாரும் அங்கத்தினர்களாகச் சேரலாம்.

நாயுடு வம்சத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டிய விஷயங்களில் ராஜ்யவிஷயத்தைத் தவிர்த்து மற்ற விஷயங்களை யோசித்து, நிறைவேற்றுவது அதன் கடமையாகும். வெளியூர் சங்கங்களிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. வரவேற்புக் கமிட்டியின் அங்கத்தினராக விரும்புவோர் ரூபாய் 5-க்கு குறையாமலும் பிரதிநிதிகளாக வருவோர் ரூபாய் ஒன்றும் சந்தாவாகக்கொடுக்கவேண்டும். ஸ்திரீகளுக்குப்பிரத்தியேகமாய் இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வெளியூர் நேயர்களுக்குத் தக்க வசதியான இடமும், போஜன சௌகரியங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. திவான் பஹதூர் பி. சி. என். எத்திராஜுலு நாயுடுகாரு M. L. C. வரவேற்பு கமிட்டியின் தலைவராகவும், ஸர், கூர்மா வெங்கடரெட்டி நாயுடுகாரு Kt., B. A. B. L. மகாநாட்டின் தலைமை வகிக்கவும் இசைந்துள்ளார்கள்.

நன்கொடைகளையும் சந்தாக்களையும் கோயமுத்தூர் ஜெயலக்ஷ்மி பாங்க் செகரிடரி ஸ்ரீமான் சி. ஆர். வரதராஜுலு நாயுடுகாருக்கும், கடிதங்களும் தந்திகளும் டாக்டர் நாயுடுகாருக்கும் அனுப்பவேண்டியது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

---

**வடாற்காடு ஜில்லா பிராமணரல்லாதார் மகாநாடு:**—நாளது மாதம் 18-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆம்பூர் ஸ்வாமி விவேகாநந்தவாசகசாலையில் ஒரு பொதுக்கூட்டம் திரு கந்தசாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது. 12 பேர் கொண்ட ஒரு வரவேற்பு கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் மேற்படி மகாநாட்டை அடுத்த ஏப்ரல் மாதம் 23, 24 தேதிகளில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இம்மகாநாட்டின் உபசாரணை கமிட்டி தலைவராக திருவாளர் டி. வி. ஆர். சிவலிங்கய்ய செட்டியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். மகாநாட்டின் தலைவராக் வைக்கம் சுயமரியாதை வீரர் உயர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் மகாநாட்டின் இதர நடவடிக்கைகளை நடத்த வரவேற்புக்கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திரு ஆர். சிவலிங்கையா அறிவிக்கிறார்.

---

**அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதிதர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.**

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்

1-வது பிரைஸ் ரூ 3000, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ 1000 4வது பிரைஸ் ரூ 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸுக்கு ரூ. 500, ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ 20ல 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ 1000, ரூ. 5ல 200க்கு ரூ. 1000, ,, 3ல் 600க்கு ரூ. 1800, ரூ 2ல் 2400க்கு ரூ. 4800 ஆக பிரைஸ 3381க்கு ரூ. 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 கனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்கு ரூ 9000 ஆக ரூ 33000.

1. (4—5—1927) பிரபவ-ஞு சித்திரை-மீ 22-உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகள் வைத்திருந்து முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ சூ. அ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சூ ஆ முத்து நாடார், பத்திராதிபர்.

---


நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

**உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்**

அவரவரதிர்ஷ்டம் அறியலாமிதுநிஜம், ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

**இரங்கூன் இரகசியம்.** ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனமிராது. ரசகீயம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிர்தமமைந்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம் கம்பனி வேஷம் போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச ஜீவனம்ச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைத்துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது. மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0 வி. பி. தபால்செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்.

## கோயிலும் குருக்களும்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் செய்த விரிவுரை.

தமிழ் மக்களுள் கல்வி, அறிவு, ஒழுக்கம், உயிர்களிடத்து இரக்கம், சிவபக்தி முதலியவைகளில் சிறந்தவர்களை அந்தணர் என்று அழைப்பது தமிழ் மக்களின் வழக்கம். அவ்வந்தணர்களையே மக்களுக்கு வேண்டிய அறிவு வளர்ச்சிக்கு ஆசிரியர்களாகவும் ஆலயங்களில் நாள் தோறும் காலந்தவறாமல் கடவுளை வழிபாடு செய்யவும் ஆலயங்களிலிருந்து மக்களுக்குச் சமய நீதி முதலிய போதனைகளைச் செய்யவும் அவர்களையே குருக்களாகவும் தமிழர்கள் கொண்டிருந்தார்கள். தங்கள் வீடுகளில் நடைபெறும் நலந்தீங்குச் சடங்குகளையும் இவர்களைக் கொண்டே நடத்திக்கொண்டு வந்தார்கள். அக்காலத்தில் தமிழர்களுக்குள் இக்காலத்தைப்போல நூற்றுக்கணக்கான சாதி வேற்றுமைகள் கிடையா. பிறப்பால் அந்தணரென்று ஒரு தனி ஜாதி இல்லை. குருக்கள் என்று ஒரு குலமுமில்லை. கோயிலில் குருக்கள் காலபூசை செய்தாலும் தமிழர்கள் தங்களுக்குப் புண்ணியகாலமெனத் தோன்றும்போது தங்கள் பெரியோர்கள் இறந்துபோன நாட்களிலும் பொதுவாகத் தாங்கள் விரும்புங் காலங்களிலும் ஆலயங்களில் சென்று ஆங்குள்ள கடவுளின் வடிவங்களுக்குத் திருமுழுக்காட்டித் தீபமேற்றித் தூபமிட்டுத் தமிழ்ப்பாட்டால் அருச்சித்து வந்தார்கள். இதற்குச் சான்று தேவாரத்தில்

"செந்தமிழர் தெய்வ மறை நாவர்
செழுநற்கலை தெரிந்தவரோடு
அந்தமில குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனே"

என்று திருவீழிமிழலைப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் கட்டளை இட்டருளுகின்றார். அக்காலத்தில் இக்காலத்துக் கோயில்களில் நடைபெறும் நைவேத்தியங்கள் என வழங்கும் தோசை, வடை, சுண்டல், பலகாரவகைகள், பொங்கல், புளிச்சோறு, தயிர்ச்சோறு முதலிய பிரசாதங்கள் இல்லை. தேங்காய், வாழைப்பழம், கூடம் முதலியவைகளும் இல்லை. குருக்களுக்கு கூலி கொடுத்து கடவுளுக்கு அருச்சனைச் செய்ததுமில்லை. ஆனால் நாளேற நாளேறப் பணமுள்ள கோயில்களில் பரிவார தேவதைகள், திருவிழாக்கள், விழா உருவங்கள், அபிமூர்த்திகளுக்கு நகைகள் பள்ளியறைகள் ஏற்பட்டன. படுக்கை அறையில் பலகாரங்கள் வைக்கப்படுவதோடு வெற்றிலை பாக்கு வைத்ததைச் சுவாமி இரவில் மென்று காளாஞ்சியில் உமிழ்ந்து வைத்திருப்பதாகச் சொல்லி அதனைப் பிள்ளை இல்லாதவர்கள் வாங்கி அருந்தினால் மக்கட்பேற்றை அடைவார்களென்றும் அது ஒரு காண்டி ஒரு ரூபாயென்றும் குருக்கள் சில கோயில்களில் விற்கின்றார்கள். அன்றியும் மேள வாத்தியங்கள், வாகனங்கள், நடனமாதர்கள் பாணவேடிக்கை முதலான விநோதங்களெல்லாம் கோயில்களில் உண்டாயின. கடவுளுக்குக் காணிக்கைகள் செலுத்த வேண்டுமென ஏற்பாடு ஏற்பட்டன. இப்பொய்க் குருக்களின் வார்த்தையை நம்பி நமது மக்கள் கடவுளுக்குக் காசு, பணம், சவரன் முதலியவைகளைக் குருக்கள் வைத்திருக்கும் உண்டியில் போடலானார்கள். இன்னும் இக்குருக்கள் நோயாளர்களைக் கண்டால் நோய்வந்த உறுப்புகளாகிய கண், காது, மூக்கு, வயிறு, கால், கை முதலிய உறுப்புகளைப்போல் பொன்னாலும் வெள்ளியாலும், செய்து கோயில் உண்டியில் போடச் சொன்னார்கள். அருச்சனை தீபாராதனை முதலியவைகளுக்குக் கட்டணம் கொடுக்க ஏற்பாடு வைத்துக்கொண்டார்கள். இதனால் கோயிலுக்குச்சென்று கடவுளை வணங்குகிறவர்கள் படும்பாடு அப்பகவானுக்குத்தான் தெரியும். கோயிலினுள் கரு இல்லமாகிய (கருப்பக்கிரகம்) சிறு இடத்தில் காற்று வெளிச்சமே இராது. அங்கு நூற்றுக்கணக்கான ஜனங்கள் நெருங்கி நசுக்கப்படுவார்கள். அந்த மிகுதியாகக் கொளுத்தப்படும் கற்பூர புகை சூழ்ந்து விளக்கு வெளிச்சத்தையும் கண்ணையும் மறைத்து மனிதர் மூச்சு விடுவதற்கு முடியாமல் திக்குமுக்கலாடுவார்கள். கோயிலுக்குள் போனால் அங்குள்ள ஒவ்வொரு சாமிக்கும் அருச்சனை முதலியவைகள் செய்ய வேண்டுமென்பார்கள். வடநாட்டில் காசி, ஜெகந்நாதம், பண்டரீபுரம் முதலிய எல்லா இந்து கோயில்களிலும் இந்துக்கள் எல்லோரும் கோயிலினுள் இருக்கும் சிவலிங்கமாகிய அருட்குறியைத் தொட்டு முழுக்காட்டிப் பூசிக்கின்றார்கள். தென் இந்தியாவிலோ தமிழ் குருக்கள் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களை தமிழர்கள் தொடக்கூடாதெனவும் ஆலயங்களில் சிலர் உட்செல்லக் கூடாதெனவும் தடுத்துவிட்டார்கள். நம் ஆலயங்கள் சீர்படவேண்டுமென்றால் சைவ சமயம் வளரவேண்டுமானால் இக்குருக்களிடமிருக்கும் ஆலய சுதந்திரங்களைத் தமிழர் எல்லோரும் அடையவேண்டும். தென் இந்தியாவில் பணமுள்ள பெரிய கோயில்களின் வாயில்களில் சைவ சமயத்தை அழிப்பதற்குரிய போர்டு (விளம்பரம்) செய்துள்ளார்கள். அதில் முகம்மதியர், கிருஸ்தவர், இந்துக்களில் ஒடுக்கப்பட்ட சில வகுப்பினர் முதலியவர்கள் உள்ளே வரக்கூடாதென்று எழுதியிருப்பதைக் காணலாம். இதனால் சைவ மதத்தில் புறமதஸ்தர்கள் ஒருவரும் வந்து சேரக்கூடாதென்றேற்பட்டுவிட்டது. இந்துக்களிலும் சில ஜாதியார் வேறு மதத்திற்குப் போகவேண்டுமென ஏற்பட்டுவிட்டது. இது நமது சமயாசாரியர்கள் கருத்துக்கும் சமய வளர்ச்சிக்கும் முற்றும் மாறான செய்கையாகும். நமது ஆசிரியர்கள் சைவ சமயத்தில் புறமதஸ்தர்களை எல்லாம் சேர்த்து அரும்பாடு பட்டுச் சைவ சமயத்தை தாங்கள் வளர்த்தார்கள். அப்பர் சுவாமிகள் புறமதமாகிய சமண சமயத்திலிருந்து தம் சகோதரியின் முயற்சியால் சைவசமயத்தில் வந்தவர். சம்பந்தமூர்த்தியும், அப்பரும், மாணிக்கவாசகரும் சமணர்களையும் புத்தர்களையும் சைவமதத்தில் சேர்த்தார்கள் என்பதை அவர்கள் வரலாறுகளாலும், பாடல்களாலும் அறியலாம். மகாதவசிரேஷ்டரும் பெருந்துறவியுமாகிய தாயுமானார் உலகத்திலுள்ள புறமதஸ்தர்களை எல்லாம் சைவத்தில் வந்து சேரும்படி,

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

எனக்கதறினார்கள். சமய வளர்ச்சிக்கு நாம் என்ன செய்கின்றோம் என்பதைச் சைவ நன் மக்கள் நினைக்கின்றார்களா? கனவிலும் கருதுவதில்லை. நமது சமயாசாரியார்களின் கருத்துக்கு மாறாக இந்துக்களில் சில வகுப்பினரும் புற மதத்தினரும் கோயிலினுள் வந்தால் கோயிலும் கடவுளும் தீட்டாய் விடும் அங்குள்ள தெய்வத்துக்கு சக்தி குறைந்து விடும் என்று நினைக்கின்றார்கள். மனிதனால் தீட்டாக்கப்பட்டுச் சக்தி கெட்டுப்போகும் தெய்வம் மனிதனுடைய பாவத்தைப் போக்கி மோட்சத்தைக் கொடுக்குமா? முகம்மதியர் கிரிஸ்தவர் தாழ்ந்த வகுப்பினர் முதலியோர் சிவன் கோயிலுக்குள் வாராமல் தடுக்க காவற்காரரும் இருக்கின்றார்கள். தப்பித்தவறி மேலே கண்ட நம் சகோதரர்கள் கோயிலினுள் நுழைந்து விட்டால் உயிரோடு வெளியே வந்துசேர முடியாது. இந்த கொடுமையை மதுரை திருநெல்வேலி இராமேஸ்வரம் முதலிய கோயிலில் இன்றும் காணலாம். இந்த மூடத்தனமான கொள்கையுடைய சாமானிய மக்களின் கருத்தைத் திருத்த அச்சில்லாக்களிலுள்ள சைவப் பெருமக்களும் ஜமீன்தார்களும் செல்வர்களும் தலைவர்களும் இதுவரையில் என்ன செய்தார்கள்? சட்டசபையில் நிறைவேறிய இந்து மதபரிபாலன மசோதாவால் இனிமேலாவது இந்துக்கள் எல்லோரும் ஆலய பிரவேச சுதந்திரம் வேண்டுமென ஒரு திருத்தத்தை அம் மசோதாவில் கொண்டுவருவார்களென நம்புகின்றோம். இந்த விஷயத்தைப் பற்றி யாராவது பேசினால் அப்பெரியோர்கள் அது ஆகிற காரியமல்ல அதனால் கலகம் உண்டாகுமென்று சொல்லித் தங்கள் சுயகாரியத்துக்கு மதப்பெருமைக்கும் வெகு பாடுபடுகின்றார்கள். ஆனால் இதனுடைய நன்மை தீமை விரைவில் தெரியும். சைவ சமயமும் தமிழ் வேத சாஸ்திரங்களும் இக்கோயில்களும் போனால் நமக்கென்னவென்று சிலர் நினைத்திருக்கின்றார்கள். இன்னும் கொஞ்ச காலம் தமிழர்கள் இப்படி இருப்பார்களானால் நமது ஆலயங்களில் வாகனங்கள் தூக்குகிறவர்களையும் பெரிய தேர்களை இழுத்துக் கொண்டு வந்து நிலையில் நிறுத்தும் ஏழைத் தமிழ் மக்களையும் இந்து மதத்தில் காண முடியாது. அவர்களும் புறமதத்திற்குப் போய்விடுவார்கள். இக்கொடுமைகளைச் சகியாத சிவபெருமான் உலகத்திலுள்ள பெரிய தேர்களில் ஒன்றாம் பழமையாகிய தேருமான திருவாரூர் தேரை ஜோதியில் சேர்த்துக்கொண்டார் போலும். கிருஸ்தவ முகம்மதிய புத்த ஏகான்ம வாத நாத்திக மதங்கள் இந்தியாவில் வளர்ந்து வருகின்றனவென்றால் சைவசமயம் குறை

ந்து அழிந்து வருகின்ற தென்பதை அறிய வேண்டாமா? புறமதங்களில் போய்ச்சேர்ந்தவர்களெல்லாம். இனிச்சேர்கிறவர்களெல்லாம் நமது சைவமக்களல்லவா? தமிழ்மக்களல்லவா? ஜனகணித (சென்ஸஸ்) ப்படி இந்தியாவில் உள்ள ஜனத்தொகையில் ஆதிதிராவிடரை (இந்து பஞ்சமர்களை) இந்துக்களினின்று பிரித்தல் மற்றமதஸ்தர்களோடு பஞ்சமர்களைச் சேர்த்தல் இந்துக்கள் என்கிற சைவ வைணவர்களின் தொகை மிகக் குறைந்து விடும்; இதைககண்ட நம்மவர்களில் சிலர் பஞ்சமர்களை இந்துக்களோடு சேர்த்து சென்ஸஸ் கணக்கெடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அந்த இந்து பஞ்சமர்களை (ஆதித்திராவிடர்களை) இந்துமதப் பொதுகோயில்களில் எவ்விதமாக நடத்துகின்றோம் என்பதைக் கொஞ்சமும் நினைக்கின்றார்களா? இவர்கள் நெஞ்சில் கொஞ்சமாவது ஈரம், இரக்கம், நீதி இருக்கின்றதா? தங்கள் சமயத்திலாவது உண்மை அன்பு அபிமானம் இருந்தால் தமது சமயத்தை வளர்க்காமல் அழிப்பார்களா? தமது சமயத்தை வளர்க்கும் வழி தெரியாவிடினும் பிறரைப்பார்த்தாவது கற்றுக்கொள்ளக்கூடாதா? கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதாலும், வெள்ளியாலும் பொன்னாலும் வாகனங்களைச்செய்து திருவுருவங்களுக்கு நகைகளைப்பூட்டி வாணவேடிக்கைகளோடு திருவிழா நடத்தினால் மட்டும் நமது சமயம் வளருமா? ஒவ்வொரு ஆலயங்களிலும் நடைபெறும் வேடிக்கைகளுக்கும் தங்கத்திலும் கல் இழைத்த நகைகளுக்கும் மண்டகப்படிகள் முதலிய உபகாரியங்களுக்கும் எவ்வளவு செலவு செய்கின்றார்கள்? இச்செலவுகளில்பாதியைக் குறைத்து அந்தந்தக்கோயிலின் ஆதரவில் தமிழ்ப்பாடசாலை சமயபாடசாலை ஏற்படுத்தினால் சோற்றுக்கு இல்லாமல் திரியும் ஏழைபிள்ளைகளைப் படிக்கவைத்தால் எவ்வளவு நன்மை உண்டாகும்? தமிழ்ப் படிப்பவர்களைப் பார்ப்பதே அருமையாய்விட்டது பி. ஏ. பட்டதாரிகள் பல்லாயிரக்கணக்காக உத்தியோகமில்லாமல் பரிதவிக்கின்றார்கள் தமிழை இலக்கிய இலக்கணத்தோடு முறையாகப்படித்தும் தேவார திருவாசகத்துக்கும் சைவசித்தாந்த சாஸ்திரங்களுக்கும் பொருள் சொல்லுவார் ஒருவர் இருவருக்குமேல் தமிழ் நாட்டில் காணக்கிடையாது பார்ப்பனர்கள் மட்டும் படிக்கும் சம்ஸ்கிருத கலாசாலைகள் தமிழ்நாட்டில் மிகுதிப்படுகிறது. தமிழ்க் கல்லூரி தமிழரின் ஆதிக்கத்துக்குள் ஒன்றேனும் சரியாக நடைபெறவில்லை தமிழ் வளராமல் அசைவம்வளர்வதெதனால்? "கொஞ்சமிருந்ததுதருக்களை அடைந்தது குறையும் வெளவால் அடைந்தது" என்னும், பழமொழி இதற்காகவே ஏற்பட்டதாகும் நமது பெரிய கோயில்களிலெல்லாம் நூற்றுக்கால் மண்டபம் ஆயிரக்கால் மண்டபங்களில் வௌவால் அடைகிறதற்கு விட்டு விட்டோமன்றி மத போதனைகள் செய்வதற்காகவோ தமிழ் வேத பாடசாலைகள் ஏற்படுவதற்கோ இடமாயில்லை. இந்துமத தரும பரிபாலன போர்டால் இக்குறைகள் நிவர்த்தியாகுமென்று எதிர்பார்க்கின்றோம்.

அடியிற்கண்ட 35 கனவான்களையும் நமது பத்திரிகைக்கு சந்தாநேயர்களாக சிங்கப்பூர் ஸ்ரீமான் கோ. சாரங்கபாணிநாயுடு அவர்கள் சேர்த்துக்கொடுத்திருக்கிறார்.

1 S. KR கருப்பையா பிள்ளை
2 M. VR. PR பெரியையா பிள்ளை
3 N கோவிந்தசாமி பிள்ளை
4 K ஹூசேன்சா மரைக்காயர்
5 A S ஷேக்தாவுத்
6 S M நைனா மரைக்காயர்
7 ஹாஜி அப்துல்ரஹிமான் அண்டு கோ
8 P சுப்பிரமணிய நாடார்
9 R கன்னையா
10 M சுந்தரம்
11 P சிதம்பரம்
12 T R ஆறுமுகம்
13 M அய்யாகண்ணு பிள்ளை
14 R வடிவேலு
15 V K நாராயணசாமி
16 M S சிதம்பரம் பிள்ளை
17 K நாராயணசாமி நாயுடு
18 V அண்ணாமலை
19 V இருளப்பன்
20 K நாகமுத்து
21 M வேலு பண்டாரச்சி
22 E பைதீன் மஸ்தான்
23 R S K சுப்பராம செட்டியார்
24 A ரங்கசாமி பிள்ளை
25 P P A சுப்பராய செட்டியார்
26 AR SP சுப்பையா செட்டியார்
27 AR M அண்ணாமலை செட்டியார்
28 AR AM முத்துகருப்பன் செட்டியார்
29 AM L லட்சுமண பிள்ளை
30 S முத்துக்குமார பிள்ளை J P
31 B கோவிந்தசாமி நாயுடு
32 S R மருதமுத்து
33 K துரைசாமி மண்டூர்
34 காட்டுவாச ராவுத்தர்
35 A A வாணக்

குறிப்பு:—

நமது பத்திரிகையையும், பத்திரிகையின் கொள்கையையும் ஆதரிக்கும் விஷயத்தில் ஸ்ரீமான் கோ. சாரங்கபாணி நாயுடு அவர்களும் இன்னும் இதர கனவான்களும் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக எமது மனப்பூர்வமான வந்தனத்தையும் நன்றியறிதலையும் செலுத்துகிறோம். (ப—ர்)

## தஞ்சை ஜில்லா போர்டு

தஞ்சை ஜில்லா போர்டு, போர்டின் ஆக்ஷியில் நடைபெறும் பள்ளிக்கூடங்களில் 25 ஆதிதிராவிடர் பிள்ளைகளுக்கு உண்டி உடை கொடுத்து இலவசமாய்க் கல்வி போதிக்க ஏற்பாடு செய்திருப்பதாகக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பார்ப்பனரல்லாத பிரசிடெண்டு வந்ததினாலேதான் இவ்வித சௌகரியம் செய்ய முடிந்தது. இதற்காக அந்த போர்டாரைப் பெரிதும் பாராட்டுகின்றோம். (ப—ர்)

3ம் பக்கத் தொடர்ச்சி.

றமும் அடைந்த ஜன சமூகங்கள் மாம்ச பட்சணம் செய்தவர்களாகத்தானே இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர் மாம்ச பட்சணத்தை ஆதரிப்பவர்கள். இந்துக்களையும் சீன தேசத்தார்களையும் கவனியுங்கள். அவர்களுடைய துக்ககரமானநிலையைப்பாருங்கள். ஜப்பானியர்கள் மாம்சம் உண்ண ஆரம்பித்த பின்னரே நிலைமை மேலோங்கிற்று என்றுங் கூறுகின்றனர். ஒரு கட்சியார் மாம்ச பட்சணமே அஜீரணத்திற்கு காரணமென்கிறார்கள். "அதெல்லாம் மூடத்தனம்; மரக்கறி உண்பவர்களே பெரும்பான்மையும் வயிற்று வியாதிகளினால் துன்புறுகிறார்கள்" இந்துக்கள் இந்தியாவிலே யாகங்கள் செய்து அந்த யாகத்திலே கொல்லப்பட்ட மிருகங்களின்மாம்சத்தை உண்டுகொண்டிருந்த வழக்கம் இருந்த காலத்திலேதான் அவர்களுக்குள்ளே மகா தீரர்கள் பிறந்தார்கள் மாம்சத்தைவிட்டபின்னே அன்னியர் படை எடுப்பால் அழுந்திப்போனார்கள்" என்று மாம்சம் தின்னும் ஜாதியார் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

### கடைசி முடிவு.

மாமிசமுண்ணுவது கொடுமையும் அசுத்த புசிப்புமென்பது உண்மையே. அதனிலும் மரக்கறி பரிசுத்தமே. எவர் ஆத்மீக வாழ்க்கையோ வாழ விரும்புகிறாரோ அவர் கண்டிப்பாய் மாம்சத்தை விட்டுவிட வேண்டும். இவ்வுலகின் இடைவிடா கஷ்டங்களோடும் போட்டியினோடும் கடினமாகப் பாடுபடவேண்டியிருக்கின்றவன் மாம்சம் உண்ணத்தான் வேண்டும். பலவான் பலஹீனனை ஜெயித்துக்கொள்ளுவது என்று ஒரு விஷயம் மனுஷிய சமூகத்தில் உள்ளவரையில் மாம்ச பட்சணம் இருக்கத்தான் வேண்டும். அல்லது அதற்குத் தகுந்தாயுள்ள வேறு ஏதேனும் பிரதி ஏற்படவேண்டும். இல்லையேல் பலஹீனர்கள் பலவான்களுடைய கால்களினடியில் நசுக்கப்பட்டுவிடுவார்கள் ஏதேனும் பிரத்தியேகமான மனிதர்களுக்கு மரக்கறியினாலுண்டான நற்பயனைப்பற்றியுள்ள தனி திருஷ்டாந்தங்களை எடுத்துக்கூறுவது போதாது. நாம் ஜன சமூகங்களை ஒத்திட்டுப்பார்க்கவேண்டும். மாம்ச பட்சணமுண்ணும் ஜன சமூகங்கள் எப்பொழுதும் தைரியமுடையவர்களாயும் வீரர்களாயும் மிகுந்த சிந்தனா சக்தியுள்ளவர்களாயும் இருப்பது வழக்கமாயிருக்கிறது. இதைத்தெரிந்து நம் பெரியவர்கள் க்ஷத்திரியனுக்கு கனத்த தோலுடைய ஐந்து மிருகங்களின் மாம்சத்தை உண்ணவேண்டுமென்று விதித்தார்கள். இதில் எழுதவேண்டிய விடயம் அநேகமிருக்கிறது. இதுவே நீண்டுவிட்டது. இன்னொரு சமயம் இதில் விடப்பட்டதை எழுதுகிறேன்.


இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேல்சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

(2ம் பக்கத் தொடர்ச்சி.)

உறுப்புக்களை; ஒவ்வோர் உறுப்பு ஒவ்வோர் தொழிலுக்கு உதவியாயுள்ளதே. உறுப்புக்களுக்குள் உயர்வு, தாழ்வு காண விரும்பினால் ஒருங்கே உடலுக்கு ஊறு தான் நேருமென்பதை உற்று நோக்கி ஒற்றுமையாகவே வினைகளை ஊன்றச் செய்யவேண்டும். வினையின்றி வாளாள் கழித்தல் வீணேயாகும் அது இயற்கைக்கு விரோதமாகும். சுழற்சியே இயற்கை விதி. எதுவும் வளர்ச்சி குறைவு ஆகிய தொழில்களைச் செய்து கொண்டேயிருக்கும் நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் என்னும் இரண்டும் எக்காலமும் வளர்ச்சி, தளர்ச்சி முதலிய தொழில்களீடுபட்டு நிற்காவிடின் எவ்வகைப் பயனையும் எதிர்பார்க்கவே முடியாது. பயனில்லை யென்றால் பாழ்பட்டன்றே போகும் உலகம். அது இயற்கையல்லவே. முயற்சியென்பது இயற்கையின் அம்சமே. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்." நன்மையை விரும்புவோர் நாட்டோறும் இயற்கையை அநுசரித்து எந்த வினையையும் இயற்றுதலே ஏற்றமுடையதாகும். வீணே தானேவென்று இயற்றப்புகுவோர் ஏமாந்து போவார். கடமை என்று சொல்லப்படும் அறமே ஆசனம் அல்லது வாகனம்; அதின் மேலுள்ள உருவம் (உடல்) அறிவு; அவ்வறிவாகிய உடலுக்குள் ஒளிவிட்டு விளங்குவது அன்பாகிய உயிர். மேன்மேல் நோக்குழி அறம், அறிவு, அன்பு ஆகிய மூன்றும் விட்டு நீங்காத ஒற்றுமைப் பொருள் என்பது புலப்படும். படலான் அம்மூன்றையும் ஆருயிர்க்கு ஆதியாகக் கொள்ளவேண்டும்.

அவசர புத்தியும், ஆரம்ப சூரத்தனமும் அநுகூலம் பயவா. மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லினுங் குழியப்பாயும். முழுவேகமாகவோ, முழுமந்தமாகவோ செல்லின முயற்சி மட்டுப்பட்டுப்போகும். ஆலோசிக்கும் அறிவும், ஆள்வினையுடைமையும் ஒத்தோங்க இடைமுறையாகச் சென்றால் மட்டும் சிறிய வினையும் பெரியபயனைத் தரும். தத்தம் மரியாதையைத் தாழ்வற நோக்கித் தாராள எண்ணத்தோடு காரியமாகச் சார்புணர்ந்து மேன்மேலேறி ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் அறவினைகளை ஓவாதே செய்தல்வேண்டும். செய்தக்கால் உலகத்து உயரிய இன்பமே அவ்வின்பத்தை நாமே நேரில் நாடி அடைவோம். கேடு சூழ்பவரைக் கிட்டாது அகல்வோம்! இருளே போ, இருளே போ என்று எத்தனை ஆண்டுகள் சொல்லிக்கொண்டிருந்தாலும் அவ்விருள் போகாது. விளக்கை ஏற்றிவிட்டால் ஓட்டெடுத்து விடும் எங்கே போயிற்று? ஒளியிலே மறைந்தது. அதுபோலக் கல்வியும், அறிவும், ஒழுக்கமும், தகுதியும் மிகுந்த நாம் மேலெழப்போனால் வெளிப்படும் ஒளியிலே மாற்றார் இருள் மறைந்தே போகும். போகவே மயக்கமுமில்லை, மானக்கேடுமில்லை சுதந்தர வாழ்வு இதம்பெற நடக்கும். ஆனால் இடையிலே தடைகள் வரக்கூடும். அத்தடைகளைச் சரியமாக விலக்கி விடல்வேண்டும். வடகாற்று (வாடைக்காற்று) மேல்காற்றுக்கும் வேண்டிய வேண்டியாகக்கும் அப்புகள்

## கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் கிராம சிப்பந்திகள்.

வெட்டி, தலையாரி, ரிவனியூ நீர்கட்டி வேலைகளைச்செய்து வருகிறவர்கள் பெரும்பாலார் ஆதித்திராவிடர்களே. இவர்கள் தொன்று தொட்டு இராப் பகலாய் 2 ரூபாய் சம்பளத்திலிருந்து உழைத்து வருகிறார்கள். 20, 30, 50, 100, 1000, 2000 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் கூட சம்பளம் பத்தாது, குடும்பச்செலவுக்கே கஷ்டம் என்று மீட்டிங்கோ மகாநாடோ கூட்டி அதில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். இவ்வேழைச் சிப்பந்திகள் 2 ரூபாய் சம்பளம் இராப்பகலாய் வேலைசெய்கிறவர்களுக்கு கட்டிவாராது என்று கேட்டவர்களே இவர்களில் இல்லவே இல்லை. கவர்ன்மெண்டாரே இவர்கள் வேலையைக் கவனித்து 8 ரூபாய் மாதச் சம்பளம் உயர்த்தினார்கள். இன்னும் சம்பளத்தை அதிகப் படுத்துவார்களென்று எதிர்பார்த்திருக்க "எச்சு மீசை ... தொச்ச மீசையும் போச்சு" ... போல் 8 ரூ. சம்பளத்தில் 8 அணாவை குறைத்து விட்டார்கள். இவ்வேழைச் சிப்பந்திகளுக்கு 8 ரூ. அதிகமென்றோ அல்லது இதனால் கவர்மெண்டாருக்கு நஷ்டமென்றோ அல்லது எவ்விதகாரணம் பற்றியோ அல்லது முப்பத்திக்கால் ஏழரைதான் தகுதியென்றோ 8 அணாவைக் குறைத்துவிட்டார்கள். இன்னும் 2 ரூபாயைக் குறைத்து விட்டாலும் இவர்கள் கேட்கப் போகிறவர்களுமல்ல. போட்டதைத் தின்றுவைத்ததை சுமக்கிறவர்களே! கவர்மெண்டுக்கு இராப்பகலாய் பாடுபட்டு விட்டு வீட்டுக்குடிகளிடம் கஞ்சிக்குக் கெஞ்சி மனைவி மக்களும் படும் துன்பம் சொல்லத்தரமல்ல. இஞ்சினியர் டிப்பார்ட்மெண்டில் சொற்ப சம்பளக்காரர் நீரானி அல்லது லஸ்கர் இவர்கள் 4 ரூபாய் சம்பளத்திலிருந்து மாசம் 12 ரூ ஆக்கினதினால் ஒருவாறு காட்டிக் கொள்ளுகிறார்கள். ரிவனியூ டிபார்ட்மெண்டிலிருக்கின்ற கிராம சிப்பந்திகளைக்குறித்துப் பேச தாலூகா போர்டு ஜில்லாபோர்டுகளில் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள் அதிகமில்லை. (ஒன்றோ அல்லது இருந்தால் இவர்கள் சல்லுப்பில்லையாரே தவிர வேறில்லை.) மாகாண மண்டலச் சட்டச் சபையில் தாழ்த்தப்பட்டோர்களுக்காக பரிந்து பேசும் ஸ்ரீமான் ராவ் பகதூர் எம். சி. ராஜா முதலிய 10 மெம்பர்களும் இவர்களுக்காக பரிந்து பேசி மாதம் 12 ரூபாய் சம்பளம் உயர்த்த தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினால் இவர்களின் கஷ்டம் நீங்கும். சென்னை சட்டசபையில் காலியாகும் ஸ்தானத்துக்கு கோவை ஸ்ரீமான் ஆர் வீரய்யனை நாமிநேஷன் செய்ய கவர்ன்மெண்டார் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம். சென்ற 5—3—1927-வயில் பெருந்தலையூரில் இரவு 7-30 மணிக்கு ஆதிதிராவிடப்பெண்கள் ஓர் பெருங்கூட்டம் கூடி சிக்கன செலவு நமது முன்னேற்றத்துக்கு விசேஷித்த வழியென்றும் இது பெரியவனின் மகோலாகுமென்றும் சந்தையில் வாங்கும் ஒவ்வொரு செலவையும் வார முழுவதும் சமமாக பிரித்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாள் பாகத்தையே செலவு செய்வதாய் வாக்குறுதி செய்தும் வேலையின்றி காலம் தள்ளும் நமக்கு கைத்தொழில் அத்தியாவசியம். இத்தொழில் இல்லையேயானால் நமது ஆயுசு நாள் ஒவ்வொரு தினமும் வீண் நேரமாய் கழிந்துநமது குடும்பம் மிகவும் கேவலமாக நசுக்கப்பட்டு போகின்றது. நமது புருஷர்களையும் மக்கள்மார்களையும் வேண்டி சுமார் 30 புருஷத்துக்கு முன் நூற்ற இராட்டினத்தை செய்து கொடுக்கச்சொல்லி நூல் நூற்போம் இதுவே நாம மேற்கொள்ளுவோம் என்று உறுதி கூறினார்கள் கே. எம், தானியேல் மேஸ்திரியால் வறுமையில் செம்மை என்னும் விஷயத்தை குசேல முனிவர் பெண் ஜாதி சுசீலை கற்பக்காசியின் சரிதையை குறித்து அதிவிமரிசையாய் உபந்யாசிக்கப்பட்டு 9-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது என்று பெருந்தலையூர் கெ. எம். தானியேல் மேஸ்திரி தெரிவித்துக் கொள்ளுகிறார்.

---

றேற்படுத்துகின்றது இயல்புதானே. அது போல நமக்கு ஏற்பட்டிருக்கும் (படர்கண் மேற்கண்) இருபெருங் காற்றுக்களுக்குந் தப்பிப் பெருவாழ்வு வாழவேண்டுவது அவசியமே. எதையும் செயற்கையினாலே அடியோடு அழிக்கவோ முடியாது அதினை கொடுமையைக் குறைத்து விடலாம். ஒளியுள்ள மட்டும் இருளுக்கு இடமில்லாதது போல நம்நாட்டில் பேரொளி பிறந்தக்கால் நம் பிறரால் வருந்தமேது? இருந்தமான முறையிலே பொருத்தமுள்ள வினைகளைச் செய்து கொண்டு வருந்தல் நீங்க வாழ்வேமாக. அவ்வாழ்வுக்குக் கல்வி, அறிவு ஒழுக்கம் முதலியவைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு தடைகளையும் முக்கியம். முன்னவை அகத்தே தூய்மை செய்வது, பின்னது புறத்தே தூய்மை செய்வது, பரத்தினின்றே உள்ளே புகுதல் வேண்டும். இது அநுபவ சத்தி.

வெல்க! காந்தி அடிகள் வெல்க!!

வாழ்க! செந்தமிழ் நாடு வாழ்க!!

ஓங்குக! "குடி அரசு" என்றும் ஓங்குக!!

---

பார்ப்பனியமொழிந்த கதி:—சென்னை கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்துக்கருகாமையில் முத்துமாரியம்மன் கோயில் தெருவென வழங்கும் முத்துகிருஷ்ணன் தெரு ... இல்லத்திலிருக்கும் திருவாலங்காடு கிருஷ்ணசாமி முதலியார் தமது மருமகன் அலகற்கண்ணம்மாளுக்கு 13-3-27 ஞாயிற்றுக்கிழமை நடத்திய வருட திதியில் பார்ப்பனப் புரோகிதனை நீக்கி, சாலை விநாயகர் ஆலயத்திறகு அர்ச்சகராயிருக்கும் திருஞானசம்பந்த முனிசாமி முதலியாரைக் கொண்டு நடப்பித்த பார்ப்பனியமன்றி வாகனுதிகளும், ஷை ஜாதியர் மரபைச்சார்ந்த சுமங்கலிகளுக்கு கொடுக்கப்பட்டு ஷை அலகற்கண்ணம்மாள் பெரிய உருவப்படத்தை (Enlarged Photo) அலங்கரித்து, தூபதீப நிவேதனஞ்செய்து. சில ஏழைகளுக்கு அன்னமிட்டு பூர்த்தி செய்தனர்.

இவர் சென்ற கார்த்திகை மாதம் தமது தாயார் திதிக்கும் பார்ப்பனப் புரோகிதனை நீக்கியே செய்தனர் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்

---


# இனும்

## இலக்ஷம் 100000 ரூபாய்கள்

இதனை 20000 பேர்கட்கு மாத்திரம் இலவசமாய் விநியோகிக்கத் தீர்மானம் செய்திருக்கின்றபடியால் நீங்கள் மாதமுடிவிற்குள் ஒரு கால முத்திரையுடன் மனு செய்துகொள்ளக் கோருகின்றனன்.

Md S A. அப்துல்காதிர் சாயபு,
நெ. 2 அனிதலாச்சிரமம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்,

## குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கத்ரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## விளம்பரம்.

எலிகளின் தொந்தரவு நீங்கிவிடும்.

எலிகள் தான் பிளேக் என்னும் தொத்து வியாதியைக் கொண்டுவருகின்றன. அவைகளை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஓட்டவேண்டியதவசியம். ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டே எலிகளைக்கொன்று விடாமல் விரட்டுவதற்கென்று எலிபிட் என்னும் மருந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது: விலை அணா 12.

உடைந்த கண்ணாடிகளை ஒட்டுவதற்கு கண்ணாடி சோலு ஷன் விலை அணா 8.

சகல சில்வர் சாமான்களுக்கும் பளபளப்பான பாலீஷ் கொடுக்கக் கூடிய எலக்ட்ரிக் பாலிஷ் பவுடர் விலை ரூ 1.

ராமய்யா எலக்ட்ரோ கெமிக்கல் ஒர்கஸ்
வீரவநல்லூர் (S. I. R.)

## சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.


நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரி பார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவென சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தா தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

## திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது.

விலை நயமானது. சரக்கு மேலானது

Trade  Mark

28 இஞ்சு டஜன் 1-க்கு 7-14-0
30 " 8-4-0
32 இஞ்சு டஜன் 1-க்கு 8-10-0
34 " 9-0-0

Registered.

உங்களுக்கு வேண்டிய சுத்த கத்தர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதாவென்று கவனித்து வாங்கவும். ஒரே தடவையில் ஒரு டஜன் பனியன்களும் அதற்கு மேல்கொண்டும் வாங்குபவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா விதம் கமிஷன் கொடுக்கப்படும். மானேஜர்:—

*M. V. K. Khaddar Banian Works, Tirupur (S. India)*

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன், காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)


## தாய்மார்கள்.

கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருறது. 20 வருடத்து அனுபவம், எம்மதத்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—
எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இஜாந்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சி.



## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி. தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில் பலதிறப்பட்ட ஜாப வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.


இனாம்! இனாம்!! இனாம்!

## ஜீவானந்த கைத்தொழில் போதினி

என்ற புத்தகத்தைப், பார்த்தீர்களா? இல்லையானால் இன்றைக்கே 0—8—6 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். இதில் பன்னீர் சோப், ஊதுவத்தி, வாசனை சோப், பரிமள ரோஸ் பற்பொடி. அஞ்சனம் இவ்விதமான அபூர்வ 5 முறைகளடங்கியிருக்கின்றன. கொஞ்சம்பிரதிகளே அச்சிட்டிருப்பதால் உடனே முந்துங்கள்.

விலாசம்:—S. V. இராம்தாஸ் நாயுடு,
கைத்தொழில் புரொபஸர்,
செம்பொன்னார் கோவில் (S.I.R.)

## நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கைத்தில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

## சாம கற்பம்.

தாதுபுஷ்டிக்கு மிக்க உயர்ந்தது.
அனுபவத்தில் அறியலாம். விலை ரூ. 1-தான்.

S. K. வரதராஜலு நாயுடு,
கமிஷன் ஏஜண்டு. திருச்செங்கோடு. (S. I.)

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.